வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௬. } ஆனந்தவருஷ சித்திரைமீ { பகுதி ௧

* கல்வி யறிவொழுக்கச் சிறப்பு.

கடவுள் வாழ்த்து.

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
யேவருந் துதிக்க நின்ற வீராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

அக்கிராசனாதிபதி யவர்களே! சபையோர்களே!!

அவையடக்கம்.

கல்வி யறிவொழுக்கங்களாற் சிறப்புற்றோங்கும் உங்கள் முன்னிலையில் அவற்றிலொன்றுமில்லாத யான் அவற்றைப்பற்றிக் கூறுவது பொருந்துமாறில்லை யேனும் "கிளர்பொருள் இல்லான் கொடையே கொடைப்பயன்" என்பவாகலின் ஒருவாறு பொருந்துமெனக் கருதி ஏதோ சொல்லப் புகுகின்றேன்.

பீடிகை.

கல்வி, அறிவு, ஒழுக்கம் என்ற முப்பொருள்களும் எல்லாமதத்தினர்களாலும் பாராட்டிச் சிறப்பித்துக் கூறப்பெற்றுள்ளனவாம். இவற்றின் சமபந்தங்களையும், இவற்றின் சிறப்புக்களையும், இவை

* இது மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையின் ஐந்தாம் வருஷ பூர்த்திக் கொண்டாட்ட காலத்தில் (20–4–14) மு. ரா. கந்தசாமிக்கவிராயர் எழுதி வாசித்தது.

தம்முள் ஒத்தசிறப்பினவோ அன்றி ஏற்றத்தாழ்வுண்டோ என்று ணதையும் இனி ஆராய்வாம்.

கல்வியால் அறிவும், அறிவால் ஒழுக்கமும், இவற்றால் சிறப்பும் வருதல் பற்றி இவை ஒன்றற்கொன்று காரண காரிய சம்பந்தம் பெற்றிருத்தல் ஒருதலையென்க. ஆயின் கல்லாரிடத்து அறிவும், கல்வியுமறிவும் இல்லாரிடத்து ஒழுக்கமும், இம்மூன்றும் பெரும் பாற் சிறப்பும் ஒரோவழிக் காண்டமாதலின் மேற்கூறியவாறு இவற்றின் காரண காரிய சம்பந்தம் உறுதிப்பாடுறுமாறு யாங்ஙன மெனின், அற்றன்று. "கல்லாத ஒருவன் கழியநன் றாயினுங் கொள்ளாரறிவுடையார்" என்பவாகலின், கடாக்கரம் போற் கல்லார்கட் டோன்றுமறிவு அறிஞராற் கொள்ளப்படாததும் பயன் செய்யும் ஆற்றலில்லதுமாதல் பற்றிச் சிறப்பெய்துமா றில்லையென்க. அங்ஙனமே அறிவில்லார் மேற்கொண்டுள்ள ஒழுக்கங்களும் நிகழ்ச்சி வகையால் பிறழ்ச்சியுற்றுப் பிற்பயன் விளைத்தலின் முற்பட்டு நில்லாது காலத்தால் மாறுபட்டுப் போதலுறும். இவ்வொழுக்கத்தாற் பயனென்னையோ என வினவுவார்க்கு ஏற்றவாறு விடையிறுக்கக் கூடாமையின் பிறனைத்தன் வசப்படுத்தி ஒழுக்கத்திலுாக்கும் ஆற்றல் ஒருசிறிதும் பெறாது. ஆதலின் அறிவிலார் ஒழுக்கம் பயன்செய்யும் வகையிற் குறைவுபட்டதேயாம். இம்மூன்றுமில்லார் பொருளாலாதல் அதிகாரமுதலிய பிறவற்றானாதல் பிறர் மதித்தற் சிறப்புறக் காண்டமாயினும் இச்சிறப்பு உண்மைச் சிறப்பாகாது. அவரைப் பிறர் மதித்தல் அவர்பாற் பெறும் பொருள் கருதியேனும், அவர் கொண்டுள்ள அதிகாராதிகட்கு அஞ்சியேனும் நிகழ்வதாதலின் பொருளும் அதிகாராதியும் ஒழிந்தவழி முன்னர் மதித்தவரனைவருமே முன்னிற் பன்மடங்கு பழித்தலும், அவையிருக்குங் காலத்தும் முகமனுக அவர் முன்னிலையில் மதிப்புரை கூறுவதல்லது பிறுண்டுப் பழிப்புரையே பகர்தலும் கண்கூடாக யாவருமறிவர். பயன் கருதியேனும் அச்சத்தாலேனும் மதித்தல் மதிப்பாகாது. "அவமதிப்பு மான்ற மதிப்பு மிரண்டு மிகன்மக்களான் வழங்கற்பால" என்பவாகலின், தக்கார் மதித்தலே சிறப்பாகும். கல்வி யறிவொழுக்கங்களாலடைதும் இன்பத்துக்கேதுவாகிய புண்ணியப்பேறே உண்மைச்சிறப்பாம், அதனை, உண்மையில் அவற்றைப் பெற்றார் எய்தல்

கூடுமேயன்றி வஞ்சித்தொழுகும் மதியிலிகட்குக் கூடாது. கூடாமையொன்றோ! அதற்கு மாறான பழியும் அதன்பலனான துன்பமும் கூடும். ஆதலின் கல்வி யறிவொழுக்கங்களை உண்மையாகப் பெற்றுச் சிறப்பெய்த வேண்டுமென்பதும், இவை யொன்றற்கொன்று காரண காரிய சம்பந்த முடையனவே யாமென்பதும் உறுதி பெற்றமை காண்க.

கல்விச்சிறப்பு:—தேயமிடை யிட்டவற்றையும் காலமிடையிட்டவற்றையும் உள்ளவாறுணர்த்தும் ஞானக்கண்ணாதலும், தாயத்தார் கள்வராதியரால் கொள்ளப்படாமையும், கொடுக்கக் குறைபடாது வளர்தலுடைமையும் பெற்றுள்ள கல்வியென்பது தமக்கும் பிறர்க்கும் நல்லனவென்று ஆன்றோர் ஆய்ந்தறிந்துள்ள அரிய பெரிய விஷயங்களை அவர் பொறித்து வைத்த நூல்கள் வாயிலாகவேனும், அவருடனிருந்து பெறும் பழக்கவாயிலாகவேனும் நாம் அறிந்துகோடலே (கல்வி)யாகும். இக்கல்விதான் மனிதனை மனிதனாக்குவது. இக்கல்வியில்லான் வடிவால் மனிதனாகத் தோற்றப்படினும் மிருகத்தோடு வைத்தெண்ணப்படுவான். "விலங்கொடு மக்க ளனைய ரிலங்கு நூல் கற்றாரோ டேனை யவர்" என்பதனாலிவ்வுண்மை காணலாம்.

கற்குமுறை:—இலக்கிய இலக்கணாதி நூல்களை நன்கு கற்றறிந்தவர்களிடம் ஐயந்திரிபின்றித் தெளிவுறக் கற்கவேண்டும். கல்வியறிவு நிரம்பாதவர்களிடம் கற்கப்புகுதல் குருடும் குருடுங் கூடிக் குழியில் விழுந்தாங்கு, உள்ள அறிவையும் கெடுக்குமேயல்லது நல்லறிவைத்தாராது. "கற்க கசடறக் கற்பவை" என்பது சிந்திக்கற்பாலது. நல்லாசிரியனை யடுத்து நல்ல நூல்களைக் கற்றறிவதுபோல் நல்லொழுக்கமுடைய ஆன்றோரையடுத்து நன்னடையைப் பழகிக் கற்றுக்கொள்ளல் வேண்டும். இங்ஙனமாக நன்கு கற்றார்க்கு எந்த நாடும் நாடாம். எந்த வூரும் ஊராம். எல்லாருமவரை மதிப்பர். "யாதானு நாடாமா லூராமால்" என்பது தேவர் வாக்காம். "மன்னர்க்குத் தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பு" என்பர் பெரியார். இங்ஙனம் யாண்டும் மதிப்பெய்தற்குக் காரணம் இவர் கற்கும் நூல்களாலும் அறிவாலும் உலகமெய்தும் பயன்பற்றியதேயாம்.

அறிவின்தன்மை:–அறிவு, இயற்கை செயற்கை என இருவகைப்படும். இவற்றுள் இயற்கையறிவு, ஐயறிவு பகுத்தறிவு என இருவகைத்து. செயற்கையறிவு, நூலறிவு தத்துவ அறிவு என இருவகைத்து. இவையிற்றுள் ஐயறிவென்பது ஐம்பொறி வழியாக யாரும் விலங்காதிகளும் ஒப்பக்கொண்டுள்ளதே.பகுத்தறிவென்பது ஐம்பொறி வழித்தாகவன்றி மனவுணர்ச்சியாலறிவது. அதுவும் சாதாரணப் பகுத்தறிவென்றும், விசேடப் பகுத்தறிவென்றும், இருபிரிவிற்றாகும். நெருப்புச் சுடும். வெள்ளம் இழுத்துச் செல்லும். பாம்பு விஷமுடையது. என்பதாதிய சாதாரணப் பகுத்தறிவு விலங்குகட்கும் நமக்கும் பொதுவாக இயற்கையிலேயே யமைந்துள்ளது. விசேடப் பகுத்தறிவென்பது செய்யத்தக்கதின்னது, செய்யத்தகாததின்னது, இன்னது செய்தா லின்னது விளையும் என்பனவாதியாகப் பொதுவகையிற் பருப்பொருட்டாக வுணரும் மனவுணர்ச்சியேயாகும். இது விலங்கினங்கட்கின்றி மக்கட்கே விசேடமாக அமைந்துள்ளது. நூலறிவென்பது புண்ணிய பாவங்கள் மோக்ஷ நரகங்கள் இவற்றினிலையை யறிதலும், அவ்வறிதலை இடனறிந்து செலுத்தலும், இதனை இப்பொழுது இன்னவாறு இதனாற் செய்யவேண்டும், இச்செயலின் அளவிது, இச்செயலால் விளையும் பயனிது, செய்யாவழிப்படுந் தீங்கின்னது என்பனவாதி நுட்பங்களையும் நம்முன்னோர் கூறிவைத்தருளிய விதிகளையும் நூல்வழியாகத் தெரிந்து கோடலும் பிறவுமாம். இதனை

> "தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறு மறிவு."

"இருவிழிகள் வாண்முகத்தி லிருந்தாலும் வானிரவி யெழுந்தா லன்றிக், கருதுநிலப் பல்பொருளுங் காண்டலரி தாமுலகிற் கண்போல் யாரும், பெருகியசெல் வமுமறிவும் பெற்றாலு நூற்கேள்வி பெறுவார்க் கன்றித், திருவளர்புண் ணியபாவ மிம்மைமறு மையும் வீடுந் தெரியா வன்றே".

என்பனவூற்றாற்காண்க. குருவுபதேசத்தானும் பயிற்சியானும் நிலை நிலைபாமை யுணர்ந்து உலகத்தையுவர்த்து, வீடுபேற்றைக்

சாதலித்து விரதம் தவம் முதலியவற்றைப் பற்றி நிற்கச்செய்வதே தத்துவ அறிவெனப்படும். இதனை "பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்ப தறிவு" என்பதனா லுணர்க. இவையிற்றுள் இயற்கையறிவின்பாற் பட்ட பகுத்தறிவும், செயற்கை யறிவின்பாற் பட்ட நூலறிவும் ஒன்றோடொன்று சேர்ந்தே பெரும்பயன் செய்யும். பகுத்தறிவு ஒரு முளைபோலும். நூலறிவு மழைபோலும். பகுத்தறிவு கண்ணொளி போலும், நூலறிவு கதிரொளி போலும். பகுத்தறிவு ஒரு புரவிபோலும், நூலறிவு அதனைநடத்தும் பாகன்போலும். பகுத்தறிவில்லார் எத்தனை நூல்களைப்படிப்பினும் பயிரில்லா விடத்து மழையும், கண்ணில்லார் முன்பு ரவியும், புரவியில்லாவிடத்துப் பாகனும் போலப்பயன்படுமா றில்லை. அங்ஙனமே நூலறிவில்லாதபோது பகுத்தறிவானது மழை முகங்காணா முளையும், ரவி யொளி காணா விழியும், பாகனில்லாத பரியும்போலப் பயன்படுமாறில்லை. சிலர் பல நூல்களைக் குருட்டுப்பாடம் பண்ணி உருப்போட்டிருந்தும் அந்நூல்களா லடையும் பயனை அவரும் பிறரும் அடையாமையும், சிலர் கூரிய மதியுற்றிருந்தும் நூலறிவின்மையால் அவர் அறிவு நேர் வழியிற் செல்லாது போதல் பற்றி அவர்க்கும் பிறர்க்கும் பயனுற்றாமையும் நேரிற் காண்டுமன்றே. ஆதலின் இவ்விருவகை யறிவும் ஒருசேரப் பெற்றாரே அறிவுடையாராவர். அவரெய்தாப் பொருள் எதுவுமில்லை. அவரையே யாவரும் மதித்துப் பின் பற்றுவர். அல்லாதார் எத்தனை பொருள் பெற்றிருப்பினும் இல்லாரேயாவர் "அறிவுடையா ரெல்லா முடைய ரறிவிலார், என்னுடைய ரேனு மிலர்" "அறிவுடையோனறரசுஞ் செல்லும்" என்பன பெரியார் பணித்தனவாம்.

ஒழுக்கம்:—கல்வியின்பயன் அறிவாதல் போல் அறிவின் பயன் ஒழுக்கமாம். எவரும் தத்தம் வருணாச்சிரமங்கட்கு ஏற்ப ஆன்றோர் ஒழுகியவாறே விதித்தன செய்தும் விலக்கியன வொழித்தும் நடத்தலே ஒழுக்க மெனப்படும். இதனால் இது இத்தனை வகைப்படுமென வரையறுக்க முடியாவாறு பல வேறுவகைப் படுமேனும் இல்லற வொழுக்கம் துறவற வொழுக்கம் என இருபிரிவினுள் பெரும்பாலும் அடங்குமென்க. இல்வாழ்வுழி விருந்தோம்பலாதியவற்றின் வழுவாமை வேண்டும். துறந்துழி மெய்யுணர்தல் அவாவறு

த்தல் முதலியவற்றின் வழுவாமை வேண்டும். இங்ஙனம் ஒழுகு முறையின்கண் "இல்லறம் பொருளளவிற் கேற்பவும், துறவறம் யாக்கைநிலைக் கேற்பவும் செய்யலாம்" என்பவாகலின், விதித்தனசெய்தல் தத்தமக்கியன்றவரை வஞ்சமின்றிக் கொள்ளலாம். விலக்கியன வொழித்தல் விஷயத்தில் இவ்விதி செல்லாது. விலக்கியன வற்றை விலக்கியே தீரவேண்டும். விலக்குங்கால் இயன்றளவு விலக்குவே னென்றல் பொருந்தாது. இங்ஙனம் திடமாகக் கொண்டு உண்மையி னின்று சிறிதும் பிறழாது ஒழுகுதலே ஒழுக்கமெனப்படும்.

ஒழுக்கச்சிறப்பு:—இல்லறத்தார் துறவறத்தார் இன்னவ ரிருவரும் இன்னின்னவற்றைச் செய்யவேண்டும், இன்னின்ன வற்றை விலக்க வேண்டும் எனத் தேவர்கூறிய ஒவ்வோ ரதிகாரங்களுமே ஒழுக்க மாகவும், ஒழுக்கமென உடன்பாட்டு முகத்தாலோ ரதிகாரமும், கூடாவொழுக்கம் என, எதிர்மறை முகத்தாலோ ரதிகாரமும் வேறு வேறு பிரித்துக்கூறியதை நோக்குங்கால் ஒழுக்கத்தின் பெருஞ்சிற ப்பும் அஃதின்மையின் அவமதிப்பும் நன்கு வலியுறுத்துவதே அவர் கருத்தாதல் எளிதுபுலனும். ஒவ்வொருவருக்கும் தம்முயிரினுஞ் சிற ந்தபொருள்பிறிதில்லை. அவ்வுயிரினுஞ் சிறந்தது ஒழுக்கமென்பர். ஏனெனில், உயிர்தானே விழுப்பந்தருவதில்லை. ஒழுக்கமோ எல் லாவிழுப்பத்தையும் தானே தரவல்லதாகும். நல்லொழுக்கத்தாற் சகல நன்மையையும் அடைதல் கூடும். இம்மை மறுமை யிரண்டி டத்தும் புகழையும் வீடு பேற்றையும் தருவது ஒழுக்கமேயாம். ஏனைத் தீயொழுக்கமோ இம்மையிலிழிவையும் மறுமையில் நரகை யும் தந்து இரண்டிடத்துந் துன்பத்துக்கே யாளாகச் செய்யும்.

"ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கம்
உயிரினு மோம்பப் படும்"

"நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும்" என்பனவற்றை நோக்குக.

கல்வியும் அறிவும் ஒழுக்கமில்வழி யொருசிறிதும் பயன்படா வாம். கல்வியின்பயன் அறிவும், அறிவின்பயன் ஒழுக்கமுமாமென மேலே கூறினமாதலின்; ஒழுக்கமற்றவர் கல்வியறிவு, ஒளியற்றவிழி

யாழ், மணமற்றமலரும், உயிரற்ற வுடலும் போலும். தற்பயனிழத் தலால் ஒளியற்ற விழியெனவும், பிறர்க்குப்பயன்படாமையாலும் பிற ரால விரும்பப்படாமையாலும் மணமற்ற மலரெனவும், தன்னைச்சீர் ந்தாரே யருவருத்துப் புறங்காட்டிட் டொழிததலால் உயிரற்ற வுட லெனவும் மூன்றுவமைகள் கூறவேண்டிற்றென்க.

> "உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
> கல்லா ரறிவிலா தார்"

> "உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
> தலகையாய் வைக்கப் படும்"

> "ஓதி யுணர்ந்தும் பிறர்க்குறைத்துந் தாமடங்காப்
> பேதையிற் பேதையா ரில்"

> "ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை"

என்பனவற்றால் இம் மூன்றனுள்ளும், ஒழுக்கமே சிறந்த தென்பது நன்கு தெளிவுறுத்தப்பட்டமை காண்க.

ஒழுக்கமில்லாதவர் எத்தனைதான் அறநூற்பொருள்களை விரித் துரைத்தாலும், எவ்வளவுதான் இனிமையாகப் பேசினாலும் அவர் கூற்றுப் பிறர்க்கு நலஞ்செய்யாது. அதனை உலகமுங்கொள்ளாது. அவர் கூறும் விஷயம் மிகவுயர்நததாயினும் அவரது அசுத்தவாயிற் பட்டுவருதலால் அதன் பரிசுத்தமிழந்து அங்கணத்துப்பட்ட அமு தம்போலுமென்க. "கற்றுப் பிறர்க்குரைத்துத் தாம்நில்லார் வாய்ப் படூஉம் வெற்றுரை" என்பதும் இதனாலேயாம். ஒழுக்கமுடையவரி டத்திலே தான் அறவுரைகளைக் கேட்க வேண்டும். அவருரையே மெய்ந்நூற் பொருள்களை வேறுபாடின்றிக் கரதலாமலகம் போல் விளக்கிப் பெரும்பயன் விளையச் செய்யும்.

> "இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
> யொழுக்க முடையார்வாய்ச் சொல்"

> "வறுமையான் மடமை தன்னால் வருந்திநெஞ் சழியுங் காலை
> உறுதிசெய் துணையாங் கற்ற வுணர்வினை வளர்க்கு மென்றும்
> இறுதியில் லாத வின்ப மீட்டுமா தலினாற் கற்று
> மறுவுறுமொழுக்கமுள்ளார்வாய் மொழிபோற்றல்வேண்டும்."

என்பன வாதிய பிரமாணங்கள் பலவுண்டு.

ஆயினும் ஒழுக்கமென்பது தற்பயன் குறித்ததாகும். அவர் நடையைப் பின்பற்ற வேண்டுமென்பது சரி. ஒழுக்கமில்லாதவர் அறநூற்பொருள்களை யுள்ளவாறு கூறுவாராயின் அதனைக் கேட்டலால் தீங்குண்டோ? என்னின், கூறுதும். ஒழுக்கமில்லாதவர் சொல்லுங்கால் நூற்பொருள்களை யுள்ளவாறே கூறிவருவாராயினும் அவர் நெஞ்சம் தமது தீயொழுக்கத்தை மறைக்கும் வஞ்சகமுடைத்தாதலால் கேட்பவரது அறிவைத்தமது சொற்சாதுரியத்தால் மயக்கித் தம்வசப்பட்டபோது சிறுகச் சிறுகத் தமது போலிக்கொள்கைகளை ஆற்றம் பார்த்துப் புகட்டி நம்பச்செய்து பிற்கேடு பெரிதுவிளைத்துவிடுவர். ஒழுக்கமுடையவரே மறந்தும் இவ்வாறு கூறார் "ஒழுக்கமுடையவர்க் கொல்லாவே தீய, வழுக்கியும் வாயாற் சொலல்" என்பது மெய்ம்மொழியாகும். ஒழுக்கமற்றவராயிருந்தும் ஒழுக்கமுள்ளவர்போலவேடத்தானுலகை வஞ்சிப்பவர் அதிபாதகரேயாவர். இத்தகைய போலி வேடதாரிகளைக் கண்டு வேடமாத்திரையால் மயங்கி அவர் சொற்குச் செவி கொடுத்தால் இருமையினும் தீங்கு பயக்கும். இவரது சொல்லும் செயலும் மாறுபாடுடைமையாலும் இவரால் உலகத்துக்குப் பல்வகையானும் தீங்கு பலித்தலானும் இவரைப் பற்றி நமது புலவர் பெருமான்கள் கூறும் சில கவிகளை யீண்டுத் தருதும்.

வேதாகமங்கண் மிருதிநூல் புராண மிக்கவெக் கலைகளும் பயின்று
போதமே சொல்லிப் போதமங் குணராப் புலையருங்கழுதையு நிகராவ
கோதிலா வாரவ குங்குமம் பளிதம் குலவிய புழுகடை பாணி
யேதமே சுமந்த கழுதையீங்கிவனி னேற்றமாம்வஞ்சமின்மையினால்.

மிக்கவறி வுடையாரைப் போன்றுமுடற் பற்றனைத்தும் விடுத்தார் போன்றும்
தக்கவழக்கிடத்தி னுயர்திணைவினையஃறிணைவினையாச்சமையச்சொற்றும்
தொக்கபடர்க் கைப்பெயர்முன் னிலைப்பெயரா விடவுரைத்துஞ் சூழ்வதெல்லாம்
பக்குவமின்மடவோரை மயக்கியவர் கைப்பொருளைப் பறித்தற்கன்றே.

"நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணாரில்."

எனப்பலவாம். இவற்றால் ஒழுக்கந் திறம்பியவர் கல்வி யறிவுறுவர்க்கும் பயன்படா வென்பது பெறப்பட்டது.

உலகியலாகிய இருளை யகற்றுதற்குக் கல்வியறிவே விளக்கென வும், அவ்விளக்கிற்கு அருளே நெய்யெனவும், அந்நெய்யைத் தரும் பாலே ஒழுக்கமெனவும் கூறுவர். இதனால் ஒழுக்க முடையவரே அருளுடையராவர். அருளுடையரே அறிவுடையராவர். அறிவு டையரே உலகிருளைக் கடந்துய்வர் என்பது பெறப்படும். இத னால் எல்லாநலனையும் தருவது ஒழுக்கமே யாமென வலியுறுத் தியவாறும். இங்ஙனம் கூறுவது அறநெறிச் சாரம்.

"இருளே யுலகத் தியற்கை யிருளகற்றுங்
கைவிளக்கே கற்ற வறிவுடைமை—கைவிளக்கி
னெய்யேதன் னெஞ்சத் தருளுடைமை நெய்பயந்த
பால்போ லொழுக்கத் தவரே பரிவில்லா
மேலுலக மெய்து பவர்" என்பதாம்.

இதுகாறுங் கூறியவாற்றான் கல்வி யறிவொழுக்கங்களின் தன் மைகளும், அவற்றை யுண்மையாகப் பெற்றாரே பெற்றாராவரென் பதும், மற்றார் அற்றார் என்பதும், இவையொன்றற் கொன்று கார ணகாரிய சம்பந்தமுள்ளன வென்பதும், கல்வியின் சிறப்பு இத்த கையதென்பதும், கற்குமுறையித்தகையதென்பதும், அறிவின்வகை விரிகள் இன்னின்ன வென்பதும், அறிவின்பயன் இத்தகையதென்ப தும், ஒழுக்கம் இன்னதென்பதும், அஃது இத்தனைவகைப்படுமென் பதும், ஒழுக்கத்தாலாம்பயனின்னதென்பதும், தீயொழுக்கத்தாலாம் தீமையின்ன தென்பதும், கல்வியும் அறிவும் ஒழுக்கமுற்றா லன்றிப் பயன்றராவென்பதும், கல்வியறிவினும் நல்லொழுக்கமே மிகச் சிறந்தநா மென்பதும், நல்லொழுக்க முடையவரே யறநூற் பொருள்கூறற் குரியாரென்பதும், அஃதில்லார் கூறினும் கேட்டல் அடாதென்பதும், மெய்யொழுக்கமற்றவர் வேடமாத்திரையானே உலகத்தை வஞ்சிக்கும் கொடியாராமென்பதும், அத்தகையார் வேட த்தைக் கண்டு மயங்கலாகாதென்பதும், இருமைப்பயனையுந்தருவது ஒழுக்கமேயாமென்பதும் பிறவும் விளங்கும்.

பத்திராதிபர்.

மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையின்

ஐந்தாம் ௵ பூர்த்திக் கொண்டாட்டம்

இக்கொண்டாட்டமானது நிகழும் ஆனந்த ௵ சித்திரை மீ 8௳ முதல் 3 நாட்களும், அழைப்புப் பத்திரத்தில் கண்டவண்ணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதன் நிகழ்ச்சி கூறத்தொடங்கி அக்கிராசனாதிபதியவர்கள் மதுரைக்கு விஜயஞ் செய்தது முதல் அவர்கள் சென்னைக்குத் திரும்பியது வரையுள்ள விசேடம் முழுதும் அறிவிப்பாம்.

6௳ பகல் 9 மணிக்கு மதுரை ரயில்வே ஸ்டேஷனில் வித்துவான்கள் பலர் சென்று, அக்கிராசனம் வகிக்க விஜயம் செய்த சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதர் மஹாமஹோபாத்தியாயர் ப்ருமஸ்ரீ வே. சாமிநாதையரவர்களை எதிர் கொண்டழைத்து 7௳ காலை மதுரையிலிருந்து பிரயாணித்து சத்துருசங்காரக்கோட்டைச்சத்திரத்தில் தங்கி, அவண் முறையூர் ஸ்ரீமாந் பழ. இ. சண்முகஞ்செட்டியாரவர்களால் நன்கு உபசரிக்கப் பெற்றார்கள். அவண் நடந்த விருந்தைப் பாராட்டி மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான் ஸ்ரீமத் மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள் அடியில் வருங் கவியைக் கூறினார்கள்.

பையனந்தல் இளையொடுவாழ் சத்துருசங் காரக்கோட் டையிலன் புற்ற
மெய்யனந்தன் கவியருமை தெரிமுறையூர்ச் சண்முக விவேக மேலோன்
செய்யனந்த விதமான சுவையுடைத்தாம் விருந்தருந்தத் திகழுஞ் செவ்வாய்
கையனந்தன் வாணனிக ராகச்செய் தானில்லைக் கமலத் தோனே.

அங்கிருந்து மாலை 7 மணிக்கு மேலைச்சிவபுரிக்கு வந்து சேர்ந்தார்கள். அவண் சபைத் தலைவர் ஸ்ரீமாந் வ. பழ. சா. அண்ணாமலை செட்டியாரவர்கள், மகிபாலன் பட்டி வித்துவான் ஸ்ரீமத் மு. கதிரேசச் செட்டியாரவர்கள், காரியதரிசிகள், அங்கத்தினர்கள், அபிமானிகள் ஆகிய பலர் வாத்திய கோஷத்துடனும், சந்திரோதயப் பிரகாசமுள்ள விளக்குகளுடனும் வந்து தலைவரவர்களையும், இதர

வித்துவான்களையும் அருமைபாராட்டி அழைத்துச் சென்றார்கள். சபையின் முற் பக்கத்தில் விசித்திர கொட்டகை யொன்று வாழை கமுகு முதலியவற்றால் அலங்கரிக்கப்பெற்று விளங்கியது. சுமார் 500 பேரிருந்து போசனம் செய்யத்தக்கதான நகரத்தார் போசன சாலை யொன்றும், பிராமண போசனசாலை யொன்றும், வித்துவான்கள் தங்குதற்குரிய பல அறைக ளமைந்த கொட்டகை யொன்றும் மிகவும் சௌகர்யமாகவும் அழகாகவும் அமைக்கப்பட்டிருந்தன. எல்லாருந் தத்தம் இடங்களிற் றங்கினர்.

மறுதினம் காலையில் திருநாவுக்கரசு நாயனார் புராண படனமும், பூசையும், மகேசுவர பூசையும், பிராமண போஜனமும், நகரத்தார் விருந்தும் நன்கு நடந்தன. மாலை 3-30 க்கு நகரத்தார்களும், வித்துவான்களும், பிறருமாகக் கூடி வாத்திய கோஷத்துடன் அக்கிராசனாதிபதியவர்களை அழைத்துக் கொண்டு வந்து சபை கூடினார்கள். திருநெல்வேலி ஸ்ரீமத் சுந்தர மூர்த்தி ஓதுவாரவர்கள் இன்னிசையுடன் கடவுள் வாழ்த்துப்பாடினார்கள். சபையார் பிரார்த்தனைப்படி ப்ரும்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள் அக்கிராசனத்து வீற்றிருந்தார்கள். ஸ்ரீமத் வித்துவான் மு. கதிரேசச்செட்டியாரவர்கள் தலைவரவர்கட்கு வந்தனோபசாரப் பத்திரம் படித்தார்கள். காரியதரிசி ஸ்ரீ கும. மு. குமரப்பசெட்டியாரவர்கள் அறிக்கைப் பத்திரம் படித்தார்கள்.

பின்னர் அக்கிராசனாதிபதியவர்கள் எழுந்து அறிக்கைப் பத்திரத்தில் சொல்லப்பட்ட சபை நிகழ்ச்சிகளைப் பாராட்டியதுடன் பொதுவாகப் பின் வருமாறு பேசினார்கள். "இச்சபையின் பெயர் மிகச் சிறந்தது. பல மதத்தருக்கும் ஒப்ப அமைந்துள்ளது. சன்மார்க்கர் கூட்டம் என்பது நன்கு விளங்குகின்றது. "வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழியின்" என்பதால் ஏனையர் கூட்டம் விழுப்பயன்றராது. கடவுள் வாழ்த்தில் "மூலைத்தானை எல்லார்க்கு முன்னே தோன்றி" என்ற திருவாக்குக் கூறப்பெற்றமையால் இந்தப் பக்கங்களில் இச்சன்மார்க்க சபையே முதற்கட் டோன்றினமையும், சிவபிரானுக்கும் தமிழுக்கும் சம்பந்த முண்டென்பதும், சுத்தும்

இருந்த இடமான பாண்டி நாட்டிலுள்ள ஒற்றுமையும் விளக்குகி ன்றன. "நன் பாட்டுப் புலவனுய்ச் சங்கமேறி நற்கனகக் கிழிதரு மிக் கருளினேன் காண்" என்ற திருப்பாசுரம் பெற்ற திருப்புத்தூ ரைச் சார்ந்தது இந்நகராதலால் தமிழ்வளர்தற்கு இதுவே தக்க இடமாகும். சகல பரிபாலனங்களிலும் மிக்ச் சிறந்தது வித்தியாபரி பாலனம். அதிலும் தெய்வத்தன்மை வாய்ந்த தமிழ்ப்பரிபாலனம் நம்மவர்க்கு மிகவும் அவசியமானது. ஞான விருத்திக்கு ஏதுவாதற் சிறப்புள்ளது. மேலும் தமிழ்ப் பரிபாலனத்துடன் சைவசமய பரி பாலனமுஞ் சேர்ந்திருப்பதால்மகாபுண்ணியமுடையது இச்சபை யென்பது யாவரு மொப்புவர். இத்தகைய உத்தம பரிபாலனங்க ளைத் தற்காலம் அன்புடன் செய்து வருபவர்கள் நாட்டுக் கோட்டை நகரத்தார்களே யாவர். தேவகோட்டையில் ஸ்ரீ வன்றொண்டச் செட்டியாரவர்களும், ஸ்ரீ சிங்கச் செட்டியாரவர்களும்.சிறந்த வித் துவான்களாகியிருந்து பல தமிழ்வித்துவான்களை ஆதரித்து வந் தார்கள். மற்றும் பலர் ஆங்காங்கு விளங்கினர்.பொதுவாக நகரத் தார்கள் பலரும் பதி புண்ணியச் செயலால் மிக்க மேன்மை பெற்ற வர்களே.இச்சபையை ஸ்தாபித்தும் அரிய பெரிய உபந்யாசங்களைச் செய்தும், இதுபோலப் பல இடங்களில் சென்று சபைகளையும் கலா சாலைகளையும் ஸ்தாபித்தும் பரோபகார சீலராக இதோ நம்முன்னி ருக்கும் வித்துவான் ஸ்ரீ மு. கதிரேசச்செட்டியாரவர்களின் கல்வித் திறமையையும், அருமைக் குணத்தையும், பிரசங்க சக்தியையும் வியவாதாருண்டோ? பெரும் புண்ணியசாலிகளான நகரத்தார்களில் இவர்களைப் போலவே இன்னும் பல பேர்கள் முன் வந்து செயற்க ரிய பெருங் காரியங்களைச் செய்யும் வண்ணம் சிவபிரான் திருவருள் புரிவாராக" எனப் பேசியதுடன் "நன் பாட்டுப் புலவனுய்ச் சங்க மேறி நற்கனகக் கிழிதருமிக் கருளினேன் காண்" என்ற திருப்பா சுரப்பொருளை மிகவும் நன்றாக எடுத்துரைத்தார்கள்,

அதன்பின் மைலாப்பூர் P. S. ஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ மத் அநந்தராமய்யரவர்கள் "பண்டைக் காலத் தமிழ்ப்புலவரும் புர வலரும்" என்ற விஷயத்தைப்பற்றி புறநானூறு முதலிய சங்க நூல் கள் பலவற்றை ஆதாரமாகக் கொண்டு நன்கு உபந்யசித்தார்கள்.

பின்னர் மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபர் மு. ரா. கந்தசாமிக் கவிராயர் "கல்வி யறிவொழுக்கச் சிறப்பு" என்ற விஷயத்தைப் பற்றி யெழுதிய வியாசத்தைப் படித்தார்கள். படித்த பின்னர் இச்சபை மேற்கொண்டுள்ள காரியங்களாகிய தமிழ்ப்பரிபாலனமும் சைவ பரிபாலனம் என்னும் இருகாரியங்களையும் பண்டும் இன்றும் நன்கு செய்து வருபவர்கள் திருவாவடுதுறை ஆதீன குருமூர்த்திகளே யெனவும், தற்காலம் நம்நாட்டில் வசிக்கும் தமிழ்வித்துவான்களிடமுள்ள கல்வி முழுதும் இவ்வாதீனத்திலிருந்து பெற்றதே யெனவும், இலக்கியம் இலக்கணம் சாஸ்திரம் ஆகிய எவ்வகைக் கல்வியும் இவ்வாதீனத்தாராலேயே வளர்க்கப் பெற்றுள்ளன வென்பதும், தற்போது இவ்வாதீனத்தில் மஹா. சந்நிதானமாக எழுந்தருளியிருக்கிற கருணையங்கடலாகிய ஸ்ரீலஸ்ரீ அம்பல்வாணதேசிக சுவாமிகள் தம்மிடத்தே தக்க வித்துவானை வைத்துப் பலர்க்கு வித்தியாதானம் செய்வித்தும் செய்தும் வருகிறார்களென்றும், சோழநாட்டில் பலவருடங்களாகப் பாழாகியும் மகமதியர்களாற் சீர் குலைந்துமிருந்த திருச்சக்கரப்பள்ளிச் சிவாலய சீர்ணோத்தாரணஞ்செய்து திருப்பணி வேலையை மிகவும் அழகாகச் செய்வித்துக் கும்பாபிஷேகம் நடாத்தி சப்தஸ்தான மஹோற்சவத்தையும் மிகச்சிறப்பாக நடத்தியிருக்கிறார்களென்றும், சிவாலயத்திருப்பணிசீர்ணோத்தாரணமாகிய பதிபுண்ணிய கைங்கர்யத்தில் மிகச்சிறந்தவர்களாகிய நகரத்தார்கள் இந்த விஷயத்தின் அருமை யறிந்து பாராட்டுங் கடமையுடையவர்கள் என்றும், ஆனதால் ஸ்ரீ அம்பல்வாணதேசிக சுவாமிகள் செய்துவரும் சைவபரிபாலனங்களைச் சபையார் அறிந்து நன்றி பாராட்டுவதாக ஒரு தீர்மானம் செய்து அதனை அவர்கட்குத் தந்தி மூலம் தெரிவிக்கவேண்டு மென்று பிரேரணை செய்தார். ஸ்ரீ மு. கதிரேசச்செட்டியாரவர்கள் எழுந்து தாம் ஸ்ரீ மஹாசந்நிதானத்தை நேரில் தரிசித்திருப்பதாகவும், அவர்கள் நமது தமிழ்வேதமாகிய தேவாரத்தை ஆராய்ச்சி செய்துவரும் அரியகாரியம் வேறு யாவராலும் செய்தற்கரியதே எனவும், மற்றும் பலவாறு பாராட்டிப் பேசிக் கவிராயர் பிரேரணையை ஆமோதித்தார்கள். இராமநாதபுரம் ஸ்ரீமத் எஸ். சாமிநாதையரவர்களும் ஆமோதித்துப் பேசினார்கள். சபையார் யாவரும் அங்கீகரித்தார்கள். அவ்வாறே ஒரு தீர்மானம் எழுதித் தந்திமூலம் தெரிவிக்கலாயிற்று.

பின்னர் மதுரை வித்துவான் ஸ்ரீமத் நா. சுந்தரேசுவரஐயரவர்கள் செய்ந்நன்றியறிதல் என்ற விஷயத்தை நன்கு உபந்யாசித்தார்கள். ஒரு புறத்தில் ஸரஸ்வதி திருவுருவுடன் "மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை. 20—4—14" எனவும், மற்றொரு புறத்தில் "இது மதுரை வித்துவான் நா. சுந்தரேசுவரஐயரவர்கட்கு அவர்கள் புராணப்பிரசங்கத்தை வியந்து வித்துவான்கள் சன்மானித்தது" எனவும் வரையப்பெற்ற தங்கப்பதக்க மொன்று அக்கிராசனாவர்களின் திருக்கரத்தால் அவர்களுக்குப் பரிசளிக்கப்பெற்றது. அப்போது சிலவித்துவான்கள் செய்யுட்கள் கூறினார்கள்.

மதுரைத் தமிழ்ச்சங்கவித்துவான் ஸ்ரீமத்

மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள் கூறிய செய்யுள்.

முன்மார்க்கண் டன்போலு முனிவர்பல தனிகர்கல்வி முதியர் சூழிச்
சன்மார்க்க சபையில்வருஞ் சுந்தரே சய்யர்கல்வித் திறங்கண் டன்னார்
சன்மார்க்கம் பொற்பதக்கம் போற்றினு ரணிந்துமிகு நலஞ்செய் திட்டார்
என்மார்க்கும் கேட்பவர்க்கு நன்றியுண்டா மீதவ்வை யிசைத்த தன்றே.

கோட்டையூர் ஸ்ரீமத்

சி. த. சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள் கூறிய செய்யுள்.

துங்கப் பதக்கமிதோர் தூய்யசுந்த ரேசனுரந்
தங்கப் பதக்கமது தங்குதல்வெண்—பங்கயமின்
காமேவி னளதுபோ லுமேவு வோமென்று
மாமேவு பொற்பாகு மால்.

பின்னர் மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கத்தலைவர் ஸ்ரீமத் ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் முத்தின் வரலாறு என்பதைப் பற்றி நன்கு உபந்யசித்தார்கள். அக்கிராசனாதிபதியவர்கள் மேற்கூறிய உபந்யாசங்களையும் வியாசத்தையும் வியந்து பாராட்டி அபிப்பிராயங் கூறினார்கள். திருநெல்வேலி இந்து காலேஜ் ஸைன்ஸ் போதகரும் இன்னிசைவல்லுநருமாகிய ஸ்ரீமத் மஹாலிங்க ஐயரவர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்களாலும் சுந்தரமூர்த்தி ஓதுவாரவர்களாலும் அமிர்ததாரை போன்ற இன்னிசையுடன் கடவுள் வாழ்த்துப் பாடப்பெற்று நிறைவேறியது.

இச்சபையின் அபிவிர்த்திக்கு வேண்டிய மூலதனத்திற்காக இதன் நிரந்தர அக்கிராசனாதிபதியவர்கள் ஸ்ரீமாந் வ. பழ. சா. அண்ணாமலை செட்டியாரவர்கள் ரூபா பதினாயிரமும், இதன் நிர்வாக கர்களிலொருவரான ஆ. தெற்கூர் ஸ்ரீமாந் கரு. முத்து. அருணாசலஞ்செட்டியாரவர்கள் ரூபா ஐயாயிரமும், இதன் காரியதரிசிகளி லொருவரான மேலைச்சிவப்பட்டி ஸ்ரீமாந் ஏ. இராமநாதன் செட்டியாரவர்கள் ரூபா ஆயிரமும், இதன் நிர்வாகசபையாரி லொருவரான வலையபட்டி ஸ்ரீமாந் க. அரு. அருணாசலஞ்செட்டியாரவர்கள் ரூபா ஆயிரமும் ஆக ரூபா பதினேழாயிரம் நன்கொடை யுதவினார்கள். அக்கிராசனாதிபதியவர்கள் இந்நால்வர்கள் செய்த பேருபகாரத்தை வியந்து பாராட்டிப் பேசினார்கள்.

கோனாபட்டு கற்பகவிநாயக வித்தியாசாலைத் தமிழ்ப்போதகர்
ஸ்ரீமத் அ. கோபாலையரவர்கள் கூறிய செய்யுள்.

உலகிதுயர் சன்மார்க்க சபைஐந்து வயதுநின்றாற் றாற்றிமேவ
அலகில்கலை கற்றுமகா மகோபாத்தி யாயரென் வரசாங் கத்தார்
இலகவுரை தருசாமி நாதகுரு தலைமைவகித் திசைத்தான் கல்வி
இலகநகர் குலவணிகர் மூலதன மளித்தனரோர் சிறக்க வாழி.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தலைவர்
ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ண ஐயரவர்கள் கூறியது.

ஈதெற்கூர் ஈதெற்கூர் என்றேபல் நல்லறமும் இயைந்து நாடும்
ஆதெற்கூர் உறைஅருணா சலமாதி நல்லோர்தம் அரிய கல்விக்
காதற்கோர் அறிகுறியாப் பொருள்மாரி பொழிந்தனரிக் கன்னிக் கேர்க்கன்
மாதிற்கோர் கூறளித்தான் திருவருளால் நீடூழி வாழி மாதோ.

21—4—14 காலை 9-மணிக்குச் சபை கூடியது. அக்கிராசனாதிபதியவர்கள் ஆசனத்தமர்ந்தவுடன் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் இன்னிசையுடன் பாடப்பெற்றன. இராமநாதபுரம் சேதுசம்ஸ்தானம் ஸ்ரீமத் இளைய மஹாராஜா அவர்கட்குப் போதகாசிரியராயிருக்கும் ஸ்ரீமத் எஸ். சாமிநாதையரவர்கள் அதிவீரராமபாண்டியர் சரித்திரத்தை நன்றாக உபந்யசித்தார்கள். சன்மார்க்க சபைக்

கணேசர் செந்தமிழ்க் கலாசாலைப் போதகர் ஸ்ரீமத் தி. கா. சங்கரமூர்த்தி முதலியாரவர்கள் சைவசமயம் என்பதைப்பற்றி இனிது உபந்யசித்தார்கள். சொக்கலிங்கம் புதூர் மாணிக்கவாசக வித்தியாசாலைத் தமிழ்ப்போதகர் ஸ்ரீமத் ரே.. ராமமூர்த்தி ஐயரவர்கள் மக்கட்பிறப்பின் பயன் என்பதைப்பற்றி யெழுதிய வியாசத்தைப் படித்தார்கள். மேற்குறித்த உபந்யாசங்களையும் வியாசத்தையும் பற்றி அக்கிராசனாதிபதியவர்கள் தமது அபிப்பிராயத்தை நன்றாகக் கூறினார்கள். கடவுள் வாழ்த்துப் பாடப்பெற்று நிறைவேறியது.

மாலை 3–30 க்கு மறுபடி சபை கூடியது. அக்கிராசனாதிபதியவர்கள் ஆசனத்தில் அமர்ந்தவுடன் கடவுள் வாழ்த்துப் பாடப்பெற்றது. திரிசிபுரம் எஸ். பீ ஜீ. காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத் மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் நக்கீரரைப்பற்றி யெழுதிய வியாசத்தைப் படித்தார்கள். கண்டனூர் ஸ்ரீமத் தே. அரு. சித. இராமநாதன் செட்டியாரவர்கள் ஒற்றுமை என்பதைப்பற்றி யெழுதிய வியாசத்தைப் படித்தார்கள். தேவகோட்டை ஸ்ரீமத் சொ. வேலுச்சாமிக் கவிராயரவர்கள் பொறுமை யென்பதைப்பற்றி நன்கு உபந்யாசஞ் செய்தார்கள். மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீமத் மு. கதிரேசச்செட்டியாரவர்கள் திருவாசகப்பெருமை என்பதைப்பற்றி நன்றாக உபந்யசித்தார்கள். இவர்கள் உபந்யாசத்தில் திருவாசகத்தில்

வழங்குகின் றாய்க்குன் னருளா ரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக்கி னேன்வினை யேனென் விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந் துய்யக் கொள்வாய்
அழுங்குகின் றேனுடை யாயடி யேனுன் னடைக்கலமே.

அருளுடைச் சுடரே யளிந்ததோர் கனியே பெருந்திற லருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த செல்வமே சிவபெரு மானே
யிருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தே னெங்கெழுந் தருளுவதினியே

என்ற இரண்டு திருப்பாசுரங்களின் பொருட்சாரத்தை மிகவும் நயமாக எடுத்துரைத்தார்கள். அக்கிராசனாதிபதியவர்கள் முறையே வியாசங்களின் சாரத்தைத் தனித்தனி யெடுத்துக் கூறியதுடன்

திருவாசகப் பெருமை கூறிய செட்டியாரவர்கள் உபந்யாசத்தைப் பற்றி மனமுருகிப் பெரிதும் பாராட்டிப் பேசினார்கள்.

ஆ. தெற்கூர் ஸ்ரீமத் கரு. முத்து. அழகப்பசெட்டியாரவர்கள் சபையினாலாகும் நன்மையையும், சன்மார்க்கமே சிறந்ததென்பதையும், சிவாலயத்திருப்பணி முதலிய பதிபுண்ணியமே மிகமேலான தென்பதையும், இத்தகைய பதிபுண்ணியம் தம்மவர்க்குத் தொன்று தொட்டுக் கிடைத்துள்ள பெரும்பாக்கிய மென்பதையும், தற்காலம் முறையான நூலுணர்ச்சியற்ற போலிப்பண்டிதர்கள் சிலர் கூறும் வெற்றுரையால் தம்மவர்கள் மயங்கமாட்டார்க ளென்பதையும் பேசியதுடன் இச்சன்மார்க்க சபையாகிய குழந்தைக்கு நிரந்தர அக்கிராசனாதிபதியவர்களாகிய ஸ்ரீமத் வ. பழ. சா. அண்ணாமலை செட்டியாரவர்கள் உடல்போல்வார்கள் எனவும், ஸ்ரீமத் மு. கதிரேசச் செட்டியாரவர்கள் உயிர் போல்வார்க ளெனவும், மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்கள் கண்போல்வார்க ளெனவும், ஏனையர் அங்கங்கள் போல்வார்களெனவும், இப்பொழுது அக்கிராசனம் வகித்திருக்கும் மகாமகோபாத்தியாயர் ப்ரம்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள் சற்குருவை யொப்பார்களெனவும் ஆகையால் இங்ஙனம் எல்லா நலன்களும் அமையப்பெற்ற இச்சபைக்குழந்தை பல்லூழிகாலம் வாழ்ந்திருக்கும் வண்ணம் சிவபிரான் திருவருளைப் பிரார்த்திப்பதாகவும் மிகக் கம்பீரமாகப் பேசினார்கள். அப்போது

கோனாபட்டு கற்பகவிநாயக வித்தியாசாலைத் தமிழ்ப்போதகர்
ஸ்ரீமத் அ. கோபாலையரவர்கள் கூறிய செய்யுள்.

ஆர்பழநி யப்ப னனுசனண் ணாமலைமெய்
சீர்பன் கதிரேசச் செம்மலுயிர்—ஏர்பயில்கண்
கந்தசா மிக்கவிஞன் கற்றவர்கண் மற்றையங்கஞ்
சந்ததஞ்சன் மார்க்க சபைக்கு.

சபையின் மூலதனத்திற்காக நிரந்தர அக்கிராசனாதிபதியவர்களின் சம்பந்தி மகிபாலன்பட்டி ஸ்ரீமாந். சி. சா. சாத்தப்பசெட்டியாரவர்கள் ரூபா ஐந்நூறும், சபைத்தலைவரவர்கள் தமக்கையார் நெற்குப்பை சிகப்பி ஆச்சி யென்றுபேர்விளங்கிய சிவகாமியாச்சி ரூபா இரு

னூற்றைம்பதும்,டியார் தமக்கையார் ஆ.தெற்கூர் சிட்டாச்சியென்ஞம் ஏகம்மைமயாச்சி ரூபா இருநூற்றைம்பதும் நன்கொடை யுதவினூர்கள். இவர்கள்மூவரும் உதவியநன்கொடையைப்பற்றி மு. ரா. கந்தசாமிக்கவிராயர் வியந்து பேசியதுடன் இச்சபையின் நிரந்தர அக்கிராசனுதிபதியவர்களின் குடும்ப விஷயமாகவும், இவர்களின் ஞரிதிகள் குடும்ப விஷயமாகவும் சில சங்கதிகளைச் சொன்னூர்கள். அவைவருமாறு:—

இந்த மேலைச்சிவபுரியில் செல்வத்தாலும் அறிவாலும் தர்மசிந்தனையாலும் சிறப்புற்ற வ. பழ. சா. சாமிநாதன் செட்டியாரவர்கள் 1. வ. பழ. வ. வள்ளியப்பசெட்டியாரவர்கள் 2. வ. பழ. கருப்பன் செட்டியாரவர்கள் 3. இந்த மூவரும் சகோதரர்கள். இம்மூவர்க்கும் பொதுவான தர்மஸ்தாபனம் இதோ எதிரில் இருக்கும் ஊருணி. இச்சபைக்கட்டிடத்தின் நிலமும் இம்மூவர்க்கும் பொதுவானதே. இந்நிலத்தை 3 குடும்பத்தவர்களும், சந்தோஷத்துடன் இச்சபைக்குக் கொடுத்துள்ளார்கள். இவர்களில் வள்ளியப்ப செட்டியாரவர்கள் இந்த ஊருணிக்கரையில் ஒரு தண்ணீர்ப்பந்தல் வைத்துச் சிறப்புற நடத்திவந்தார்கள். தம் அந்தியகாலத்தில் தண்ணீர்ப்பந்தலிலேயே காலஞ்சென்றூர்கள். அதைவிட்டுப்பிரிய மனமில்லாமையால் அந்த இடத்திலேயே இருந்து காலஞ் சென்றூர்கள்போலும். சாமிநாதச் செட்டியாரவர்கள் குமாரர்களே இச்சபையைஸ்தாபித்துக் காலஞ்சென்ற பழநியப்ப செட்டியாரவர்களும், இப்போது நிரந்தர அக்கிராசனுதிபதியா யிருக்கும் அண்ணமலைச்செட்டியாரவர்களுமாவர். வள்ளியப்பசெட்டியாரவர்கள் குமாரர்கள் மகா-ா-ஸ்ரீ ஆறுமுகஞ்செட்டியாரவர்கள், மகா-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணன் செட்டியாரவர்கள் முதலானவர்கள். காரைக்காலம்மையார் குருபூசையை நடத்தி வருபவர்கள் இவர்களே. கருப்பன் செட்டியாரவர்கள் குமாரர் பழநியப்ப செட்டியார் முதலானவர்கள். ஆகிய இவர்கள் எல்லாரும் செல்வத்தாலும் விவேகத்தாலும் தர்மசிந்தையாலும் சிறந்துள்ளவர்களே. இவர்களில் ஆறுமுகஞ்செட்டியாரவர்கள், கிருஷ்ணன் செட்டியாரவர்கள் முதலானவர்களும் இச்சபைவிஷயத்தில் மிகவும் அபிமானமுள்ளவர்களே. தமது பிதா அவர்கள் மிகவும் கவனித்து வந்த தண்ணீர்ப்பந்தல் தருமத்தை நிலைபெற நடத்தத்தக்கவிதமாகவும், இச்சபைக்கு வருபவர்கட்கு உதவியாகவும் சமீபத்தில் இருக்கு

ம்படி ஏழாயிரரூபாவரை (7000) செலவிட்டு அழகிய கட்டடமொன்று கட்டுவித்து அதற்காக ரூபா (5000) ஐயாயிரம் ரூபாவரை மூலதனம் ஏற்படுத்தக் கருதியிருக்கிறார்கள். அப்படிச்செய்வதும் காலதாமசமில்லாமல் இப்போதே தொடங்கி அடுத்த வருஷோற்சவக் கொண்டாட்ட காலத்துக்குமுன்னமே நிறைவேற்றுவதாகவும், வருஷோற்சவ காலத்தில் இச்சபை மூலதனத்துக்கும் ஒரு பெருந்தொகை நன்கொடை கொடுப்பதாகவும் கருதியிருக்கிறார்கள். இங்ஙனம் இந்த 3 குடும்பத்தார்களும் மனவொற்றுமையுடன் சந்தோஷமாக பல்ல புண்ணியங்களைச்செய்து வருகின்றார்களானதால் இவர்கள் எல்லாருக்கும் சிவபெருமான் கருணையால் சகல நன்மைகளும் உண்டாகவேண்டுமென்று கூறினார்கள். அக்கிராசனாதிபதியவர்கள் நன்கொடை யுதவியவர்களைப்பற்றியும் மேற்கூறிய 3 சகோதர குடும்பத்தார்களைப் பற்றியும் வியந்து பேசி வாழ்த்தினார்கள். கடவுள் வாழ்த்துப் பாட்டுப்பெற்றுச் சபை நிறைவேறியது.

22—4—14-ல் காலை 9-மணிக்குச் சபைகூடியது. அக்கிராசனாதிபதியவர்கள் ஆசனத்தில் வீற்றிருந்ததும் கடவுள் வாழ்த்துப் பாடப்பெற்றது. மதுரைத்தமிழ்ச்சங்கவித்துவான் ஸ்ரீமத் மு. ரா. அருணாசலக் கவிராயரவர்கள் முத்திநெறி யென்பதைப்பற்றியும், கோனாபட்டு கற்பகவிநாயக கலாசாலைத் தமிழ்ப்போதகர் ஸ்ரீமத் அ. கோபாலையரவர்கள் ஆங்கிலமுந்தமிழும் என்பதைப்பற்றியும், வலயபட்டி விநாயக வித்தியாசாலைத் தமிழ்ப்போதகர். ஸ்ரீமத். ஙெ. திரு. இராமசாமி ஐயங்காரவர்கள் மக்கட்பிறப்பினர் கைக்கொளுதியம் என்பதைப்பற்றியும், மதுரை திருஞானசம்பந்த சுவாமிகளாதீன வித்துவான் ஸ்ரீமத். மு. கோவிந்தசாமி ஐயரவர்கள் இறைமாட்சி என்பதைப்பற்றியும், சிறந்த வியாசங்கள் எழுதிவந்து வாசித்தார்கள். யாழ்ப்பாணம் வித்துவான். ஸ்ரீமத். சி. தாமோதரம்பிள்ளையவர்கள் ஆலயதத்துவார்த்தமென்ற விஷயத்தை உபந்யசித்தார்கள்.

வல்லபட்டி விநாயக வித்தியாசாலைத் தமிழ்ப்போதகர்

ஸ்ரீமத் திரு. இராமசாமியையங்காரவர்களியற்றிய

வாழ்த்துப்பாக்கள்.

உலகமுழு வதுந்தனிக்கோ லின்றோச்சி யாசனுற்று மொளிசேர் மன்னர்
திலகனெனு மிந்தியநம் சக்ரவர்த்தி தேர்ந்தளிப்பச் சிறப்புத் தோங்கு

லைமையு மனமகிழ பாத்திய யப்பெரும்பேர் நண்ணிச் சென்னை
நிலைகுபெருந் தலைக்கழகத் தலைக்குருவிற் றலைக்குருவா யிருக்கு மேலோய். (௧)

பூசுரர்தங் குலமணியே புவிவேந்தர் கண்மணியே புனிதச் சைவத்
தேசுறுநற் குணமணியே சிறப்பியல்சிந் தாமணியே திகழ்சன் மார்க்கத்
தாசகல்பல் கலைவாணர்க் கமர்தலைச்சூ ளாமணியே யவைக டோறும்
வீசொளிசெய் தினமணியே விரும்புதமிழ்க் குருமணியே வேதவாழ்வே. (௨)

மீண்புழுவன் சிதற்கன்றி மடத்தகையார் திடத்தகையான் வரையு மூசிப்
புண்புகுப நல்லெழுத்திற் பொருந்தலுறு துயர்மெய்யில் தமிழாம் பொன்னை
எண்புகக்கை யாலேந்தி யினிதெடுத்து மேன்மையினி னேயத் தேற்றிப்
பண்புறுதா வினிதுலவ வச்சேற்றி மெச்சுருவிற் பலிக்க வைத்தோய்! (௩)

அத்தகுமுத் தமிழ்மகட னடியிடைநன் முடிகாறு மணிதற் கேற்ற
சித்திரமார் சிலப்பதிகா ரம்மணிமே கலைசிந்தா மணியே யாதி
புத்தகமா மணிகணன்கு புனைவித்தன் னவட்பேணும் பெருவில் சான்றோர்
உத்தமவன் சபைதொறுஞ்சென் றுயர்தலைமைபெறீ இப்புரக்குமுதாரமாண்பேரய்

வேண்டியன தமிழ்க்குதவு மேதகைசேர் சேதுபதி வேந்த ராலும்
பாண்டிமன் போற்றமிழ்ச்சங்கத்தலைமைநடாத் தியபாண்டித்துரைத்தேவாலும்.
ஈண்டுறுசீர்க் கோமுத்தி யெழிற்சைவ குருவாலு மெனைவராலும்
பூண்டபெரு மதிப்புற்ற புண்ணியகண் ணியமிகுத்த புலவர் கோவே.

இன்னநலம் பலசிறந்தே தன்னியமர்க் தனவெனிலென் னிசைக்கேன்யார்க்கும்
மன்னரமை யுயர்குணத்து நற்சாமி நாததமிழ் நாத விந்நாள்
தன்னில்அன்று மலைவளர்க்கும் சிவபுரிச்சன் மார்க்கசபை தழைப்ப நீவந்
தென்னவருங் கண்வெப்ப வெழிற்றலைமை வகித்திருந்தா யென்றும் வாழி: (௬)

வெண்பா.

ஐயர்ண்டார் சன்மார்க்கத் தாரு மவைக்குழவி
யெய்யாது ஞானநிலை யெய்திற்றே—பொய்யாத
நற்றமிழ்தேர் வேதியர்கோ னற்சாமி நாதனுண்மை
கற்றவனைச் சேர்ந்து களித்து. (௭)

அக்கிராசனாதிபதி யவர்கள் வியாசங்களிலும் உபந்யாசத்திலும் அமைந்துள்ள பொருள் நுட்பங்களைவிளக்கி அபிப்பிராயங் கூறினர்கள். கடவுள் வாழ்த்துக் கூறப்பெற்று நிறைவேறியது.

மாலை 3-30 க்கு மறுபடியும் சபை கூடியது. அக்கிராசனாதிபதியவர்கள் ஆசனத்தமர்ந்ததும் கடவுள் வாழ்த்துப் பாடப் பெற்றது. சோழவந்தான் வித்துவான் ஸ்ரீமத் அ. சண்முகம்பிள்ளையவர்கள் கடவுள் வழிபாடு என்பதையுபந்யாசித்தார்கள். சபைக்குவந்திருந்த வித்துவான்களையும் ஏனையர்களையும் வைத்துப் புகைப்படம் எடுக்கப்பட்டது. திருவாவடுதுறை ஆதீன சைவப்பிரசாரகர் தூத்துக்குடி ஸ்ரீமத் பொ. மு. முத்தையபிள்ளையவர்கள் தக்ஷிணாமூர்த்த தத்துவார்த்தம் என்ற விஷயத்தை யுபந்யசித்தார்கள். திருநெல்வேலி இந்துகாலேஜ் பிரதம தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் சுப்பிரமணியக் கவிராயரவர்கள் நால்வர் முத்தியைப் பற்றி யெழுதிவந்த வியாசத்தை வாசித்தார்கள். மதுரைலெக்ஸிகன் கமிட்டி வித்துவான் ஸ்ரீமத் மு. இராகவய்யங்காரவர்கள் பொருளதிகாரசாரம் என்ற விஷயத்தை யுபந்யசித்தார்கள். அமராவதிபுதூர் வயி. நாக. ராம. அ. இராமநாதன்செட்டியாரவர்கள் ஜீவகாருண்யம் என்பதைப் பற்றி யுபந்யசித்ததுடன் இதைப்பற்றித்தாம் இயற்றிய கொன்னையூர் மாரியம்மன் பதிகத்தை வாசித்துக்காட்டினார்கள். அக்கிராசனாதிபதியவர்கள் ஒவ்வொரு உபந்யாசங்களைப் பற்றியும் அவ்வப்பொழுதே சிறந்த நல்லபிப் பிராயங் கூறினார்கள். திருக்கயிலாய பரம்பரைத் திருவாடுதுறை ஆதீனம் மஹாசந்நிதானமாயெழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகள் அனுப்பியருளிய தந்தியையும், மற்றும் பலரனுப்பிய கடிதங்களையும் சபையில் வாசித்தார்கள்.

தந்தியின் மொழிபெயர்ப்பு.

திருவிடை மருதூரிலிருந்து. பொன்னமராவதியைச் சார்ந்த மேலைச்சிவபுரிச் சன்மார்க்கசபைக் காரியதரிசியவர்கட்கு.

சிவபுரிச்சன்மார்க்கசபை ஐந்தாம் வருஷோத்ஸவ கூட்டத்தில் திருச்சக்கரப்பள்ளி சப்தஸ்தான உற்சவம் இனிது முடிந்தமை பற்றி அகமகிழ்ந்து நன்றிபாராட்டித் தீர்மானம் செய்ததற்காக நாம் அத்தியந்த ஆனந்தமடைந்தோம். ஏனை மூன்று மார்க்கங்களினும் சிறந்தது நான்காவதான சன்மார்க்கமே. ஆகையால் இந்தச் சன்மார்க்கசபை நீடூழிவாழ்ந்து க்ஷேமமடையும் வண்ணமும் ஐந்தாம் வருஷோத்ஸவம் இனிது நிறைவேறும் வண்ணமும் சிவபிரானைப்

பிரார்த்திக்கின்றோம். திருச்சக்கரப்பள்ளித் தேவாலயம் பஞ்சாக்கரதேசிகரவர்களது ஆதீன கர்த்தரவர்களாகிய நமக்குவந்து சேர்ந்ததும் ஐந்தாவதாண்டு. அதுபோலவே சன்மார்க்க சபைக்கும் ஐந்தாவது வருஷோத்ஸவம், (மஹாமகோபாத்தியாயர்) சாமிநாதர், சபாநாயகர், கதிரேசன், இவையெல்லாம் ஐந்தெழுத்தடங்கியவை. ஆனந்தம் அப்படியே. இவற்றில் வடமொழியும் உண்டு.

திருவாவடுதுறை ஆதீனகர்த்தரவர்கள்.

சபையின் மூலதனத்திற்காக ஆ. தெற்கூர் ஸ்ரீமத் ஸா. பழ. சு. பழனியப்ப செட்டியாரவர்கள் ரூபா 250. இருநூற்றைம்பது ரூபா நன்கொடை யுதவினார்கள். சபையின்மீதும் அக்கிராசனாதிபதியவர்கள் மீதும் வித்துவான்கள் பாடிய வாழ்த்துப் பாடல்கள் அவரவரால் படிக்கப்பெற்றன. புதுக்கோட்டை டிரசர் ஸ்ரீமத் வேணுகோபாலநாயுடு அவர்கள் கொண்டுவந்த நறுமணமிக்க வில்வமாலை யொன்று அக்கிராசனாதிபதியவர்கட்கு அணியப்பெற்றது. தேவாராதி அருட்பாக்களும் சிவநாமமும் அடுத்தடுத்து மிக முழங்கின. கருணை தங்கிய ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்கட்கும், புதுக்கோட்டை மஹாராஜா அவர்கட்கும் மு. ரா. கந்தசாமிக்கவிராயர் வாழ்த்துக் கூறினார். இந்த 3 நாளும் அக்கிராசனம் வகித்துச் சபையைச் சிறப்பித்த கனம் ஐயரவர்களுக்கும் வித்துவான்கட்கும் நிரந்தர அக்கிராசனாதிபதியவர்களும் கதிரேசன் செட்டியாரவர்களும் தனித்தனி வந்தனங் கூறிப் பூமாலை புனைவித்துச் சந்தனதாம்பூல முதவினார்கள். வாழ்த்துப்பாக்கள் வருமாறு.

மைலாப்பூர் P. S. ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத்
இ. வை. அநந்தராமய்யரவர்க ளியற்றிய
வாழ்த்துச்செய்யுட்கள்.

மானந்தக் கான்மேலைச் சிவபுரிச்சன் மார்க்கசபை மற்றை யாண்டின்
ஆனந்த முதலெட்டிற் றானந்த முதலெட்டிற் றதனுக் கேதுத்
தானந்தந் தமிழ்விச்சை பெருகுதற்குத் தகச்செல்வந் தவப்பெற்ற றஃதோ
வானந்தம் பாலிவரைத் தலைவரெனப் பெற்றமையோ வொன்றோ ரேனை (க)

அறுநான் கிரட்டி யிளமைநல் யாண்டென் றருண்முருகின்
உறுநா வுரையு மிளமையிற் கல்லெ னுரையுமனம்
பெறுநாள்சன் மார்க்க சபையுப தேசம் பெறப்புகழே
பொறுநாதர்.மாப்பெரும் போசிரியர் புகுந்தனரே. (உ)

மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபர்

மு. ரா. கந்தசாமிக்கவிராயர் கூறியசெய்யுள்.

என்மார்க்கம் என்மார்க்க முன்மார்க்க முன்மார்க்க மென்னு மேட்டுப்
பன்மார்க்கர் தனித்தனியீ ரிருசொன்மெய்ப் பொருளறிந்து பகரக் காட்டு
நன்மார்க்க மத்தனையுந் தன்னடையிற் றருசாமி நாத மேலோன்
சன்மார்க்க சபைத்தலைமை வகித்தலினுன் மெய்ஞ்ஞானந் தழையு நன்றே.

கோட்டையூர் ஸ்ரீமத்

சித. சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள் கூறியசெய்யுள்

சங்கனூற் றேர்ச்சிமிகு சாமிநா தப்பெருமான்
இங்குமே லாந்தலைமை யெய்தியே—துங்கமார்
சன்மார்க்க மேவுஞ் சபையைச் சிறப்பித்தான்
மன் மார்க்க மோங்க மதித்து.

வலயபட்டி ஞானசம்பந்த சபைத்தலைவர் ஸ்ரீமத்

வயி. வ. ராமநாதன்செட்டியாரவர்கள் கூறிய செய்யுள்

நன்மார்க்க மீதெனவே நாட்டிற் புகல்வதற்குச்
சன்மார்க்க சங்கந் தழைத்ததே—பன்மார்க்க
வேதரசம் போதரச மிக்கபல ரசமுங்
காதல்கொண்டு வாமனம்போற் கண்டு. (க)

தமிழி னுயர்பெ ருமைச் சாமிநா தையர்
அமிழ்தி னுயர்மொழியை யாரும்—கமழ்தாவே
கேட்டுப் பரவசமாக் கேடிலுளத் தேகிறைக்க
நாட்டியதே சன்மார்க்க நன்கு. (உ)

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் வித்துவான்

ஸ்ரீமத், அ. குமாரசுவாமிப் பிள்ளையவர்கள் எழுதியனுப்பிய செய்யுள்.

வாழிய நான்மறை யாளர் பசுநிரை வான்முகில்கள்
வாழிய செங்கோ லரசர் வசியர் வளமையர்கள்
வாழிய மேலைச் சிவப்பட்டி சேர்ந்தசன் மார்க்கசபை
வாழிய வச்சபை யாளர்க ளீசன் வரமடைந்தே.

காரைக்குடி மீனாக்ஷி சுந்தரேசுவர வித்தியாசாலைத் தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீ வ. மு. இரத்தினேசுவர ஐயரவர்கள் எழுதியனுப்பிய செய்யுட்கள்.

சீர்தங்கு மேலைச் சிவபுரியிற் சன்மார்க்கப்
பேர்தங்கு மாசபையும் பெட்புடனே—நீர்தங்கு
மேதினியி லென்னான்றும் மிக்கு விளங்கியிட
ஆதியருள் செய்வா னறிந்து. (க)

நன்னா யகர்சிவர் சித்தாந்த சைவ நலம்விளக்கித்
தென்னாடு தேங்கிச் சிவமணம் மேவிடச் செய்தனராற
பின்னாட் டிருவருட் செல்வர்சில் லோர்செய்கை பீடுறவே
நன்னா வலர்சபை மிக்கு விளங்குத னன்மையதே. (உ)

இசைக்கருவிகளுடன் வாழ்த்துப்பாக்கள் பாடப்பெற்று எல்லாம் வல்ல இறைவனருளால் சன்மார்க்க சபையின் 5-ம் வருஷக் கொண்டாட்டம் இனிது நிறைவேறியது.

23—4—14 காலையில் ஸ்ரீமத் கதிரேசச் செட்டியாரவர்கள்விரும்பியவாறே ப்ரும்மஸ்ரீ மகாமகோபாத்தியாயர் வே. சாமிநாதயரவர்கள் பல வித்துவான்கள் புடைசூழ மகிபாலன்பட்டியில் விஜயஞ் செய்து கதிரேசச் செட்டியாரவர்களால் நன்கு வரவேற்று இனிது உபசரிக்கப் பெற்று அன்று அவண் தங்கிமறுதினம் 24—4—14 ல் காலை திருப்புத்தூருக்கு வந்து சுவாமி தரிசனை செய்து மாலையில் மதுரையம்பதி சேர்ந்தார்கள். 25—4—14 ல் திருவாதவூருக்குச் சென்று சுவாமிதெரிசனைசெய்து மீட்டும் மதுரைக்கு வந்து வித்துவக் கூட்டங்களுடன் முறையூர் ஸ்ரீமாந். பழ. சி. சண்முகஞ்செட்டியாரவர்களைச் சந்தித்தார்கள். அப்போது ஸ்ரீமத் மகாலிங்

மையரவர்கள் அற்புதமான இன்னிசை பாடினார்கள். அச்சமயம் மு. ரா. கந்தசாமிக்கவிராயர் அடியில்வரும் செய்யுளைக் கூறினார்கள்.

குவியமுதத் திருமொழியான் சாமிநா தப்பெரியோன் குழாத்தோ டெய்தித்
திவியமுதத் றாசிஃதென் றதிசயிப்ப வோர்வழியிற் சிறப்பு மேவும்
அவியமுத வுணவளித்தாய் முறையூர்ச்சண் முகமானின் னகத்தே யெய்திச்
செவியமுத மகாலிங்கந் தரப்பெற்றூ யொன்றிரண்டாஞ் சிறப்புற் றூயே.

இதன் பொருள் விரித்துரைத்தபின் கனம் செட்டியாரவர்களிடம் விடைபெற்று மீண்டு 26-4-14. காலை சோழவந்தானுக்குச் சென்று அவ்வண் வித்துவான் ஸ்ரீ அ. ஷண்முகம் பிள்ளையவர்களால் அன்புமிக்கு உபசரிக்கப் பெற்று மாலையில் திருவேடகத்துக்கேகி சுவாமிதரிசனை செய்துகொண்டு 27-4-14ல் (தம்மைச் சூழ்ந்து வந்த) வித்துவான்கள் பலரும் ப்ரும்மஸ்ரீ ஐயரவர்களிடம் விடை பெற, ஐயரவர்களும் வந்திருந்தவர்க் கெல்லாம் ஆசி கூறி, மிக்க மகிழ்ச்சியுடன் சென்னைக்குப் பிரயாணமானார்கள். வித்துவான்கள் பலரும் தத்தம் இடங்களுக்கேகினார்கள்.

ப்ரும்மஸ்ரீ ஐயரவர்களது நிறைந்தகல்வியும், அதற்கேற்ற நுண்ணறிவும், அவற்றிற்கேற்ற நல்லொழுக்கமும், மலர்முகமும், இன்சொல்லும் யாவர் மாட்டும் பரந்து செல்லும் பெருங்கருணையும், இன்னோரன்ன உயர்குணங்கள் பலவும் ஒருங்குசேர்ந்து தம்பால் வந்த வித்துவான்களையும் தன வைசியப் பிரபுக்களையும் தம்வசப்படுத்திக்கொண்டன. "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற தேவர் திருவாக்குக்கு இலக்கியமாவார் இவர்களே. இவர்களோடு உடனுறையப் பெற்ற இப்பத்துநாட்களிலும் வித்துவான்களடைந்த சந்தோஷம் அளவிடுந்தரத்தன்று. "தவலருந் தொல்கேள்வித் தன்மையுடையார், இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ, நகலி னினிதாயிற் காண்பாம் அகல் வானத், தும்ப ருறைவார் பதி" என்ற செய்யுள் மெய்யே கூறியதென்று எல்லாரும் பெருமகிழ் வெய்தினர். ப்ரும்மஸ்ரீ ஐயரவர்களும், வித்துவான்களும், சன்மார்க்க சபையும் எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் நீடுவாழ்க. சுபம்.

பத்திராதிபர்.

மேலைச்சிவபுரியில் தமிழ்ப்பண்டிதர் கூட்டம்.

20—4—14 முதல் 22—4—14 வரை சிறந்த தமிழ்வித்துவான்கள் பலர்கூடி அரிய பெரிய உபந்யாசங்களாலும் வியாசங்களாலும் சபையை மகிழ்வித்தார்கள் என்பது முன்னமே விளக்கப்பெற்றுள்ளது. 25—4—14 ல் வெளியான சுதேசமித்திரன் ௬-ம் பக்கம் 2-வது பத்தியில் தமிழ்ப்பண்டிதர்களின் கூட்டம், எனத் தலைப்பெயரிட்டு இதைப்பற்றிச் சிலவிஷயம் வரையப்பட்டுளது. 'சுதேசபாஷையை ஆழக்கற்றபண்டிதர்களுக்கு தேசத்தின் லௌகிக நன்மைக்குரியபலமுக்கியமானகாரியங்களில எதையும்மேற்கொண்டு நடத்த சாமர்த்தியமில்லாமை யிருப்பது அதிக விசனகரமானது" என்பது அதன் முடிவுரையாகும்.

சன்மார்க்க சபையிற் கூடிய பண்டிதர்கள் அச்சபையின் நோக்கங்களை அநுசரித்தே எதையும் செய்யக்கடமை யுடையவர்கள். சபையின் நோக்கம் பாஷாஞானமும் சமயவுணர்ச்சியும் நம்மவர்க்கு வளரச்செய்தலாம். பாஷாஞான வளர்ச்சியின் பொருட்டுப் பல இடங்களில் கலாசாலைகளை ஸ்தாபித்து மாணவர்களைக் கற்பிக்கிறார்கள். அத்துடன் சமயவுணர்ச்சி நம்மவர் மனத்தில் பதியும் பொருட்டுப் பன்முறை தங்கபண்டிதர்களைக் கொண்டு உபந்யாசங்கள் செய்விக்கின்றார்கள். புத்தகசாலைகளை ஸ்தாபிக்கின்றார்கள். பல பத்திரிகைகளை வரவழைத்துப் படிக்கிறார்கள். குருபூசைகளை நடத்துகின்றார்கள். இம்மட்டேயன்றி கவர்ன்மெண்டுக்கு விண்ணப்பஞ்செய்து பெறவேண்டிய நன்மைகள் விஷயத்தில் இச்சபையார் தலையிடுவதில்லை. சபையின் நோக்கமுமதுவன்று. ஒவ்வொரு வருஷத்திலும் பலமுறை ஆயிரக்கணக்கான சனங்களைக் கூட்டிவைத்து அவர்கள் மனத்தில் பாஷாபிமானமும் மதாபிமானமும் வளரச்செய்வதே தம் கடமையாகக் கொண்ட இச்சபையார் அதனை இயன்றவரை செய்து வருகிறார்கள்.

தமிழ் வேந்தர்கள் காலத்தே தமிழ்ப்புலவர்கள் சகல லௌகிக காரியங்களையும் நடத்திவந்தனர். அவ்வேந்தர்காலமே ஒழியவே புலவர்களும் அதனைவிட்டனர். கருணைதங்கிய பிரிட்டிஷ் அரசாங்கத்தில் சகலரும் ஆங்கில பாஷையிலேயே அறிவிக்க வேண்டும். அதைத்தான் ராஜாங்கத்தார் கவனிக்கின்றனர் ஆதலின் ஆங்கிலங் கற்றுத் தமிழுமறிந்த அதிமேதாவிகளாகிய நமது சுதேசமித்திரன் பத்திராதிபரவர்கள் போன்றோரே லௌகிக காரியங்களில் பிரவேசிக்

கவும் சாதிக்கவும் வல்லவராவார்கள். தனித் தமிழ்ப்பண்டிதர்கள் லௌகிக காரியங்களில் பிரவேசியாதிருத்தல் குறையாகாது.

மேலும் ஒவ்வொருவரும் தாம் தாம் மேற்கொண்ட காரியங்களைச் செய்வதே போதுமானது. பாஷாபிவிருத்தி செய்யவேண்டி ஓயாமல்பேசுவதிலும் எழுதுவதிலும் வரும் நன்மையைவிட, நமது சிறுவர்கள் நன்றாகக் கற்கும்படி செய்வதில் அதிக நன்மையுண்டென்பது சபையார் கருத்து.

ஆங்கிலங் கற்றவர்கள் தமிழை யலட்சியஞ் செய்கிறார்களென்பதுண்மையே. இதனைத் திருத்த அரசாங்கத்தாரே கருதவேண்டும். பிறரால் சாத்தியமன்றே. 30 வருஷங்களுக்கு முன்னிருந்ததைவிட இப்பொழுது தமிழில் பத்திரிகைகளும் புஸ்தகங்களும் அதிகமாக எழுதப்பட்டும் வெளிப்படுத்தப்பட்டும் வருகின்றன. மதுரைத் தமிழ்ச் சங்கம் பாண்டித்துரைஸாமியவர்கள் காலத்தைவிட இப்போது நன்னிலை பெற்றுள்ளது அவர்கள் காலத்தில் இதற்கு மூலதனமேயில்லை. இப்போது 20,000 ரூபா வரை ரொக்கமிருக்கிறது. இன்னும் தொகை சேர்கின்றது. இதற்கு உழைப்பவரும் பலர் முன்வந்துள்ளார்கள். ஆதலால் ஐவேசியும் ஆதரவுமில்லாமல் அபர்கின்றதென்பது சரியன்று. பண்டையாசிரியர்கள் நூல்களும் உரைகளும் கிடைத்தவரை வெளிவந்துள்ளன. ஓலைச்சுவடியிலிருந்து செல்லரித்துப்போகாதவாறு 1 க்கு 1000 மாகச் சுத்தப்பிரதியாக வெளிவந்துள்ளன. இவைகளைவாங்கி வாசித்துணர்வதுதான் நம்மவர் கடமை. அக்கடமையை நம்மவர்க்குப் போதித்து வாசிக்கச்செய்வது இச்சபையின் நோக்கம். அதனைச் செவ்வையாகச் செய்து வருகின்றது. ஞாபகச்சின்னங்கள் ஏற்படுத்த முயலலாம். அதற்குப்பெரும்பொருள் சேரவேண்டும். அப்படிச்சேர்த்தற்கு உத்தியோகஸ்தர்கள் செல்வாக்குடன் முயன்றால் மட்டும் சுலபமாக முடியும். வீணாரவாரமாகப் பேசுவதாலும் எழுதித்தள்ளுவதாலும் பயனுமோ ? ஒன்றில் பிரவேசிக்குமுன் இது முடியுமா முடியாதா என்பதைத் தெரிந்து தங்கள் சக்தியையுபயோகிப்பதுதானே முறை.

லௌகிக சம்பந்தமான காரியங்களைச் செய்தற்குரிய கூட்டம் இதுவன்று. ஆதலால் இக்கூட்டத்தார் அவைகளைச் செய்யாமை குறையாகக் கருதப்படாது. இக்கூட்டத்தால் விளைந்த நன்மையாவது 1000 ஜனங்கள் தமிழிடத்தும் சைவசமயத்திலும் அன்புகொள்ளச் செய்ததேயாம். ஜனங்கள் இங்ஙனம் அன்புபாராட்டினமை நேரிலிருந்தவர்கள் பிரத்தியட்சத்தி லறிவர்.

மதுரை வாசி.

சமாசாரக்கொத்து.

தேவகோட்டை வைசிய சிவானந்த சபை நிகழும் ஏப்ரல்௴ 27, 28 இருதினங்களிலும் கூடியது. தூத்துக்குடி வாசியாகிய திருவாவடுதுறை ஆதீன சைவப்பிரசாரகர் ஸ்ரீ பொ. முத்தைய பிள்ளையவர்களும் யாழ்ப்பாணம் வித்துவான் ஸ்ரீ தாமோதரம் பிள்ளையவர்களும் சிறந்த உபந்யாசங்கள் செய்தார்கள்.

மதுரைத் தமிழ்ச் சங்கம் 13-வது வருஷ பூர்த்திக் கொண்டாட்டமானது நிகழும் 1914ஆம் மேமீ 16உ முதல் 3 நாட்களில் இராமநாதபுரத்தில் கனம் பொருந்திய ஸ்ரீமத் சேதுபதி மஹாராஜா அவர்களால் நடாத்தப் பெறும். அக்காலை கொழும்பு கௌரவ ஸ்ரீமாந் பொ. இராமநாத முதலியாரவர்கள் அக்கிராசனம் வகிப்பார்கள். அறிஞர் சிலர் எழுதி வரும் வியாசங்கள் படிக்கப் பெறும்.

கோநகர் ஞானசம்பந்த நற்சபையின் இரண்டாம் வருட பூர்த்திக்கொண்டாட்டமானது நிகழும் மேமீ 21உ 22உ இந்த இருதினங்களில் கோநகரில் நடத்தப் பெறும். அக்காலை சென்னைப் பிரஸிடென்ஸிக் காலேஜ் பிரதம தமிழ்ப்பண்டிதரும் மஹா வித்வசிகாமணியுமாகிய மஹா மஹோபாத்தியாயர் ப்ரும்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள் அக்கிராசனம் வகிப்பார்கள். வித்துவான்கள் புலவர் உபந்யசிப்பார்கள்.

கண்டரமாணிக்கம் விவேகாநந்த சபை. இச்சபையார் நிகழும் ஆனந்தஆு சித்திரைமீ 27உ 28உ இருதினங்களிலும் கூடுவார்கள். அநேக வித்துவான்கள் உபந்யசிப்பார்கள்.

நாச்சியார்புரம், செந்தமிழ் வாசக சாலை:— இதன் அக்கிராசனாதிபதி ஸ்ரீமாந் சுப. ராம. நாச்சியப்ப செட்டியாரவர்கள் காலஞ் சென்ற பின் இதுவரை நடைபெறவில்லை. இப்பொழுது மேற்படி நாச்சியப்ப செட்டியாரவர்களின் தந்தையாரவர்களும், நாச்சியப்ப செட்டியாரவர்களின் தமையனாராகிய இராமசாமி செட்டியாரவர்களும் நாச்சியப்ப செட்டியாரின் ஞாபகார்த்தமாக இவ்விஷயத்தில் சிரத்தையுடையவர்களாகி இதற்கு ரூபா பதினாயிரம் வரை மூலதனம் எடுத்து வைத்து நிரந்தரமாக நடைபெறச் செய்யக் கருதியிருக்கின்றார்களாம். மேமீ 25 உக்குள் ஒரு சபை கூட்டி வித்வான்களை வரவழைத்து உபந்யாசம் நடத்துவதாகவும் மற்றும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்விப்பதாகவும் முயன்று வருகிறார்களாம். இவ்விஷயத்தைக் கேட்க மிகவும் சந்தோஷிக்கின்றோம். இறைவனருளால் இனிது நிறைவேறுவதாக.

பத்திராதிபர்.

கமலினி

(௩௮௪-ம் பக்கத்தொடர்ச்சி).

களம் 3.

இடம்—ஷை அரண்மனையில் மற்றோரறை: காலம்—ராத்திரி.

வீரகேசரி:—(தனிமையாகப் படுத்துக்கொண்டே) இவ்வுலகத்தில் ஒரு மனிதனுக்கு அவனுடைய விவாகமே மற்றெவ்விஷயங்களைப்பார்க்கிலும் முக்கியமான விஷயம். ஏனெனில் அதற்குப்பிறகு அவன் தன் வாழ்நாள் முழுவதும் சுகமனுபவிப்பதும் துக்கமனுபவிப்பதும் அவ்விவாகத்தாலேயே ஏற்படுகிறது. ஒருவன் எவ்வளவு தரித்திர நிலைமையிலிருந்தாலுஞ்சரி, அல்லது வேறு விதங்களில் குறைவுடையவனாயிருந்தாலுஞ்சரி, அவனுக்குத் தன் மனதிற்கிசைந்த மனைவி கிட்டுவாளாயின் அவன் இவ்வுலகத்தில் துன்பமடையக் காரணமில்லை. ஏனெனில், அம்மனைவியினன்பில் மற்றக்கவலைகளை மறந்து விடலாம். அப்படிப்பட்ட பெண் தனக்குக் கிடையாவிட்டால் அவனுக்கு இவ்வுலகத்தில் வேறு நரகம் வேண்டுவதில்லை. எவ்வளவு செல்வமுடையவனாயிருந்தபோதிலும் மற்றெவ்வித பாக்கியமுடையவனாயிருந்தபோதிலும் அவனுக்குத் துன்பமேயொழிய இன்பமில்லை. அவ்வளவு முக்கியமான காரியம் விவாகம். அப்படிப்பட்ட காரியத்தில் என் மனதிற்கு விரோதமாக நடக்கவேண்டியதாயிருக்கிறதே. நானென்ன செய்வேன்? ஒரே பிடிவாதமாய் மறுத்துவிட்டால் என்னுடைய சக்ரவர்த்தியின் கோபத்திற்காளாவதுமன்றி என்னருமைத் தாயின் வருத்தத்திற்கும் பாத்தியப்படவேண்டியதாயிருக்கின்றதே. சக்ரவர்த்தியின் கோபத்தையொரு பொருட்டாக எண்ணாவிட்டாலும் என் தாயின் மனவருத்தத்தையெப்படி சகிப்பது? ஆனால் அதற்காக நான் கமலினியை மணஞ்செய்து கொள்வதற்குச் சம்மதித்தாலொருவேளை என்னாயுள் முழுவதும் துன்பமனுபவிக்க நேரிட்டால் நான் என்ன செய்வேன்? அப்படியொரு துன்பமு மேற்படாதென்று என் தாய் சொல்லுகிறார்கள்.

நானுங் கமலினியை யறிந்தவரையி லவளால் அவள் கணவனுக்கு ஒரு துன்பமு மேற்படாதுதான். இருந்தாலும் ஒருவனுக்கு தன் மனைவியினிடத்திலிருக்க வேண்டிய காதல் எனக்கு கமலினியினிடத்திலேற்படவில்லையே. அப்படியிருக்க நானவளை யெப்படி மணஞ் செய்துகொள்வது? மணஞ்செய்து கொண்டபிறகு காதலேற்படுமென்று என் தாய் சொல்லுகிறார்கள். அதுவுண்மைதான். நமக்குள் அநேக கணவர்களு மவர்கள் மனைவிகளும் தங்கள் விவாகத்திற்கு முன்னொருவருடைய முகத்தையே யொருவர் பார்த்திருக்கமாட்டார்கள். அப்படியிருந்து மவர்களன்புடன் வாழ்வதை நாம் தினந்தோறும் பார்க்கிறோமல்லவா? அப்படிக்காதலாவது எனக்கேற்படுமென்றாலோ அதுவுமுண்டாகாதென்றே தோன்றுகிறது. கமலினியை முன்னமே எனக்குத்தெரியாம லிருந்தாலும் காதல் பின்னேற்படுமென்றெண்ணலாம். நானோ அவளுடன் சிறு பிராயமுதல் கூடி விளையாடி யவளை யென் சகோதரியாகப் பாவிக்கின்றேனே! அவ்வெண்ணத்தை மாற்றி நானவளை யெப்படி என் மனைவியாகக் கருதக்கூடும்? ஆனாலவள் மாத்திர மென்பேரிலதிகக் காதல்கொண்டிருக்கிறதாகவே தோன்றுகின்றது. இல்லாவிடில் தன்னுயிரையும் வெறுத்து இவ்வளவு தூரம் வந்து சக்ரவர்த்திக்கு மருந்து கொடுப்பாளா? கமலினி! நானென் செய்வேன்! நீ கொண்டிருக்கிறகாதல் எனக்கு ஏற்படவில்லையே! உன்னை யென் சகோதரியாகப் பாவிக்கின்றேனே! நானுன்னை யெப்படி மணஞ் செய்துகொள்வது? ஒரு நாளுமுன்னை மணஞ்செய்ய எனக்கு மனந்துணியாது. அப்படிச்செய்தாலு மவ்விவாகத்தாலெனக்குச் சுகமேற்படுமென்று தோன்றவில்லை. ஆகையால் சக்ரவர்த்தியிட மிவ்விஷயங்களை யெடுத்துச் சொல்லுகின்றேன். அவர்களுக்கும் நான்சொல்வதுண்மையென்று தோன்றினு லவர்களென்னை வற்புறுத்துவார்களா? என் தாயு மல்லவோ என்னை இவ் விஷயத்தில் வருத்தப்படுத்துகிறார்கள். நானென் செய்வது? ஒரு வழியினும் போவதற்கு என் மன மிடங் கொடுக்கவில்லையே. (சற்றுநேரம் யோசித்துக் கொண்டிருந்து) எல்லாம் சக்ரவர்த்தியிடஞ் சொல்லிப் பார்க்கிறேன். அவர்கள் சொல்வதின் பேரில் மற்ற விஷயங்களை யோசித்துக் கொள்வோம். (நித்திரை போகிறார்).

களம் 4.

இடம்—ஷை அரண்மனையில் மற்றொரு அறை. காலம்—காலை.

சக்ரவர்த்தி :—(வீற்றிருக்கின்றார்கள்) சேவகா.

சேவகன் :—(தெண்டமிட்டு நிற்கிறான்).

சக்ரவர்த்தி ;—வீரகேசரி மன்னனை அழைத்துவா. (சேவகன் போகிறான்). அவருடைய தாயார் அவரிடத்தில் சொல்லியிருப்பார்களென்று நினைக்கின்றேன். அவருடைய அபிப்பிராயமென்ன விதமாயிருக்குமோ தெரியவில்லை. அவர் நேரே பிடிவாதமாய் மறுத்துவிட்டால் நான் கமலினிக்களித்த வாக்கை யெப்படி நிறைவேற்றுவது? வரட்டும் கேட்போம். (வீரகேசரி வந்து நமஸ்கரிக்கின்றார்) வீரகேசரி ! இப்படியுட்காருங்கள். நான் எதற்காக அழைத்தேனென்பது தெரிந்திருக்குமே? தங்கள் தாயார் சொன்னார்களல்லவோ ?

வீரகேசரி :—ஆம் சொன்னார்கள்.

சக்ரவர்த்தி :—அது விஷயத்தில் உங்களபிப்பிராய மென்ன ?

வீரகேசரி :—என்னபிப்பிராயமென்ன ? நானுங் கமலினியுஞ் சிறு பிராய முதல் ஒன்றாய்க் கூடி விளையாடிக்கொண்டிருந்தவர்களாதலால் நானவளை இதுகாறுமென் சகோதரியாகவே பாவிக்கின்றேன் அப்படியிருக்க அவளை நான் மணஞ் செய்து கொள்வதென்றால், அதைவிட என்க்கு வேறென்ன பாவமேற்படப் போகின்றது.

சக்ரவர்த்தி :—அவளை வெறுப்பதற் கதைத்தவிர வேறு காரணங்களுண்டோ ?

வீரகேசரி :—வேறொரு காரணமுங்கிடையாது. அக்காரணத்தைக்கொண்டு மவளை நான் வெறுக்கவில்லையே. அவளை யென் சகோதரியாக நினைத்து நேசிக்கின்றேனே யொழிய வெறுக்கவில்லையே.

சக்ரவர்த்தி :—சரி அஃதிருக்கட்டும். கமலினியைப் பற்றித் தங்களபிப்பிராயமென்ன ?

வீரகேசரி :—கமலினி யழகிற்சிறந்தவள், மிக்க புத்திசாலி, நற்குணங்கள் வாய்ந்தவள், திடமான தெய்வபக்தி யுடையவள்.

சக்ரவர்த்தி :—ஆகவே அவளை மனைவியாக அடைகிறவன்?

வீரகேசரி :—வெகு புண்ணியஞ் செய்தவனாகத் தானிருக்க வேண்டும்.

சக்ரவர்த்தி :—அவளாலவள் கணவனுக்குத் துன்பமேற்படக் காரணமுண்டோ?

வீரகேசரி :—இல்லை.

சக்ரவர்த்தி :—அப்படியிருந்து முங்களுக்கேனவளை மணஞ் செய்துகொள்ளச் சம்மதமில்லை?

வீரகேசரி :— அப்பொழுதே தெரிவித்துக் கொண்டேனே. ஒரு கணவனுக்கு தன் மனைவியினிடத்தி லெவ்விதமான காதலிருக்கவேண்டுமோ அவ்விதமான காதலெனக்குக் கமலினியினிடத்தி லேற்படவில்லையே. நானவளை யெப்படி மணஞ் செய்து கொள்வது?

சக்ரவர்த்தி :—மணஞ் செய்துகொண்டா லவ்விதமான காதல் தங்களுக்கேற்படும்படி நடந்துகொள்வதாகக் கமலினி சொல்லுகிறாள். நீங்கள் ஒப்புக்கொள்கிறபடி யவள் புத்திசாலியா யிருந்தாலவள் அப்படி நடந்துகொள்வாளல்லவா?

வீரகேசரி :—நாங்களிருவர்களு மொருவருடனொருவர் பழகாமலிருந்திருந்தோமானால் அவள் அப்படிச் செய்துகொள்ளக்கூடும். எனக்குமன்பு ஏற்படக்கூடும்.

சக்ரவர்த்தி :—பழகாம லிருந்தாலே யப்படி யவள் செய்துகொள்ளக்கூடுமென்றால், பழகி யவளை நன்குயறிந்திருக்கிற தங்களை யவள் காதல்கொள்ளச் செய்வ தின்னு மெளிதாயிற்றே. மேலுமுங்களுக்கு மவளிடத்தில் வெறுப்பில்லை. ஒருவிதமான அன்புமேற்பட்டிருக்கிறது. ஆகையா லுங்களை யவள் தன்னை நேசிக்கச் செய்வது கடினமன்று.

வீரகேசரி :—தடுத்துச் சொல்வதற்காக மன்னிக்கவேண்டும். எனக்கு அவ்விதமான காதலொருநாளு மேற்படாதென்றே தோன்றுகிறது. (இன்னும் வரும்)

டி. யம். சங்கரலிங்கம்பிள்ளை.

அவஸ்தைகளையும் அவன் தன்னிடம் எழவொட்டாமல் தடுக்கவேண்டியவனாகின்றான். காதல், அன்பு, இவைகளை அந்த இடத்தில் அவன் மறந்துவிடவேண்டியவனாயிருக்கிறான். மற்றவர்கள் பாராட்டும் துக்கமும் துயரமும் அவன் மனத்தை நிலைகுலையச் செய்தபோதிலும், அவற்றால் அவன் மனத்தளர்ச்சியுறாமலும், அவற்றிற்குத் தன் மனத்தில் இடங்கொடாமலும் ஸ்திரபுத்தியோடும் மனோதிடத்துடனும் சிகிச்சை செய்யவேண்டியவனாகிறான். நோயாளியின் அறைக்குள் நுழையும்போதே, அவன் அமைதியோடும் நுட்பமான மதியோடும் இருக்கவேண்டுவது அவசியமாகிறது. நோயாளியின் சரீர நிலைமையும், நோயாளியைச் சுற்றியுள்ள புறப்பொருள்களும் அவனுடைய மனத்தைக் கவருமாயின், அவன் தன்னுடைய தொழிலை முறைப்படி செய்வதற்கு அசக்தனாகிறான். நோயாளி வயோதிகப்பருவமாயினும், வாலிபப்பருவமாயினும், பேரழகு வாய்ந்தவளாயினும், அங்கவீனமுடையவளாயினும், நற்குணவதியாயினும், தீக்குணமுடையாளாயினும்,—இவைகளைப் பொருட்படுத்தாமலும், கவனியாமலும்,—'மானுடஜன்மம் படும் கஷ்டத்தை மானுட அறிவினால் நீக்கவேண்டும் என்னும் மானுட இரக்கம் ஒன்றையே குறியாகக்கொண்டு வைத்தியன் சிகிச்சை செய்யவேண்டியவனாகின்றான். இன்னும் அரை நிமிஷத்தில் நோயாளிக்கு உயிர் போகுமென்று தனக்கு நன்றாய்த் தெரிந்திருந்த போதிலும், அவ்வுண்மையை வெளியிடாமல் அந்த நிமிஷத்திலும் தன்னுடைய சிகிச்சையை மிகுந்த சாமர்த்தியத்துடன் செலுத்தி விதியுடனும் யமனுடனும் போர்புரியும் வைத்தியன் எவ்வளவு மனோதிடமும் நம்பிக்கையும் உடையவனாயிருக்கவேண்டும்? அவன் செய்யும் காரியம் எவ்வளவு பொறுப்புள்ளதாயிருக்கவேண்டும்?

நான் காந்திமதிக்கு வைத்தியம் பார்ப்பதற்காக அவளுடைய வீட்டிற்குச் சமீபத்திற் சென்றபோது, அவன் வீட்டிற்கு எதிரில் ஜனங்கள் கும்பலாய் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். நான் சிறிதுநேரம் தெருவாயிற்படியிலேயே நின்றேன்.

"என்னைப் பேசாமல் விட்டுவிடுங்கள், நான் அங்கே வரமாட்டேன். ஆ! இவ்விடத்தில் காணப்படும் காட்சிகள் எவ்வளவு அழகாயும் மனோரம்மியமாயும் இருக்கின்றன. இங்கே இருக்கும் கனி மரங்களும், புஷ்பசெடிகளும், மலர்க்கொடிகளும், இதற்குமுன் நான் காணாதவைகளாய இருக்கின்றனவே? ஆ! எவ்வளவு மந்தகாசமான காற்று; சுகந்தமான நறுமணம்! ஆ! இந்த ஆற்றில் ஜலம் பால்போல் வெளுத்திருக்கின்றதே? ஒரு சமயம் பாலாகவே இருக்குமோ? வாயில் ஊற்றினால் பாலைப்போன்ற ருசியும் மணமும் இருக்கின்றதே? காராவின் பாலும் இதற்கு இணையன்று. [சிறிதுநேரம் மௌனம்] ஆஹா! இச்சையாகிருகம் எவ்வளவு அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்கிறது? இன்னிசை

யோடு கூடிய பாட்டுகள், என் செவியில், அமிர்த மழை வருஷிப்பதுபோல் நுழைகின்றனவே? ஆ! நான் அங்கே பார்த்த கட்டழகன் இங்கே வந்து என் பக்கத்தில் வீற்றிருக்கின்றாரே? இவர் இங்கே எவ்விதம் வந்தார்? இவர்தானே என் மனத்தைக் கொள்ளை கொண்டவர்? [மௌனம் சிறிது நேரம்] ஓ! இதென்ன பயங்கரமான காட்சி? இந்த மனிதர்கள் நெருப்பின் மத்தியில் நடந்து செல்லுகின்றார்களே? இவர்களுடைய சரீரம் முழுவதும் தீயினால் எரிந்துகொண்டிருக்கும்போது இவர்கள் எவ்விதம் உயிரோடு இருக்கின்றார்கள்? பேரிடியும் பெருமழையும் பயங்கரமான காற்றும் கண்ணைப்பறிக்கும்படியான மின்னலும் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக்கொண்டு தத்தம் ஆற்றலைச் செலுத்துகின்றனவே? இவைகளுக்கு இடையில் நான் எவவாறு அச்சமற்றிருப்பேன்? ஆ! என்னை யாரோ தூக்கிக்கொண்டு போகின்றார்களே? என் செய்வேன்? [சிறிது நேரம் மௌனம்] சரி; இருக்கட்டும், நீங்கள் எல்லோரும் அப்புறம் செல்லுங்கள்" என்று உரத்த குரலுடன் பேசிய சத்தம் வீட்டிற்குள்ளிருந்து வந்தது.

அங்கிருந்தவர்கள் ஒருவரோடொருவர் ஆச்சரியத்துடனும், அச்சத்துடனும் பேசிக்கொண்டார்கள். சங்கதி யாதென அவர்களை விசாரித்தபோது காந்திமதியே அவ்விதம் பேசுகிறாள் என்றும், ஜன்னிபிறந்துவிட்டதால் வாய்க்கு வந்தபடி அவள் புலம்புகிறாள் என்றும் அவர்கள் சொன்னார்கள். காந்திமதியின் வியாதி யாதென்பதையும், அவள் இவ்விதம் புலம்பினதற்குக் காரணம் யாதென்பதையும் நான் அறிந்துகொண்டேன்.

நான் 'சரவணவிலாஸம்' என்னும் பெயருடைய மாளிகைக்குச் சென்று நோயாளியைப் பார்த்தவுடன், எனக்கு ஒருவிதமான அச்சமுண்டாயிற்று. பழைய சம்பவங்கள் என் ஞாபகத்திற்கு வந்தன. முன்பு குலாம்காதிறு எந்த அறையில் எந்த இடத்தில் எந்த விதமாய், நான் அவருக்கு வைத்தியம் பார்க்கும்பொருட்டுச் சென்றபோது, படுத்திருந்தாரோ அதே அறையில் அதே இடத்தில் அதேவிதமாய்ச் சிவகாமியின் புத்திரி காந்திமதி படுத்திருந்தாள். அவ்விதம் அவள் படுத்திருந்தது எனக்குப் பேராச்சரியத்தையும் அச்சத்தையும் விளைவித்தது. குலாம்காதிறுவின் மரணசம்பவமும், அவன் உயிர் நீங்கிய போது அவனுடைய குழந்தைகள் அழுதுபுலம்பிய பரிதாபமான காட்சியும், என் கண்முன் தோன்றின. நான் சிறிதுநேரம் நோயாளியாகிய காந்திமதியைக் கூர்ந்து கவனித்தபடியே மெய்மறந்து நின்றேன். ஆனாலும், காந்திமதியைக் குணப்படுத்திவிடலாம் என்னும் நம்பிக்கை மாத்திரம், எக்காரணம்பற்றியோ, எனக்குப் பலமாய், அவளை நோக்கியபோதே ஏற்பட்டுவிட்டது.

"ஜ்வரம் முதன்முதல் எப்போது கண்டது? இதற்குமுன் இம்மாதிரியான ஜ்வரம் வந்ததுண்டா?" என்று நான் சிவகாமியை வினவினேன்.

"நேற்று மாலை ஏழுமணிவரையில் காந்திமதி சுகமாய்த்தானிருந்தாள். பின்புறமுள்ள தோப்பில் நெடுநேரம் வரையில் நேற்று மாலையில் உட்கார்ந்து படித்துக்கொண்டிருந்தாள். தோப்பிலிருந்து வீட்டுக்குள் வந்தபோது 'அம்மா! எனக்குத் தலைவலி அதிகமாயிருக்கிறது, ஏதோ ஒருவிதமான மயக்கம் எனக்குண்டாகிறது' என்று சொல்லிக்கொண்டேவந்து கட்டிலிற் படுத்தாள். சிறிது நேரத்திற்கெல்லாம் ஜ்வரம் வந்துவிட்டது." என்று சிவகாமி பதில் உரைத்து "இதற்குமுன் இம்மாதிரியான ஜ்வரம் அவளுக்கு வந்ததே இல்லை" என்று மீண்டு வற்புறுத்திக் கூறினாள்.

"இதற்குமுன் இம்மாதிரியான மயக்கம் வந்ததுண்டா?" என்று மீண்டும் நான் வினவினேன்.

"இல்லை; வந்ததே இல்லை. அந்திப்பொழுதில் தோப்பில் நெடுநேரமாக வாசித்துக்கொண்டிருந்ததால், களைப்புற்று ஒருசமயம் மயக்கம் வந்திருக்கக் கூடுமென்று நான் நினைத்தேன். நான் நினைத்தபடியே சுமார் ஒரு மணி நேரம் சென்றபிறகு, மயக்கம் நீங்கிப் பேசினாள். பிறகு சிறிது ஆகாரம்கொடுத்தேன். ஜ்வரம் மாத்திரம் கடுமையாகவிருந்தது,—ஆனால், அயர்ந்து தூங்கினாள். நாளையதினம் ஜ்வரம் சௌக்கியமாய்விடுமென்று நினைத்து நானும் ஒருவாறு தைரியமாயிருந்தேன். ஆனால் அதிகாலையில்,—சுமார் மூன்றுமணி இருக்கும்,—நித்திரைசெய்துகொண்டிருந்தவள் திடீரென்று வாய்விட்டுக் கதறினாள். தானாகவே அழுவதும், பேசுவதும், சிரிப்பதுமாக அதுமுதல் இருக்கின்றாள். நான் என்ன கேட்டபோதிலும் பதில்சொல்லாமல் மௌனம் சாதிக்கிறாள். சிற்சில சமயங்களில் அவளுடைய கண்கள் ஒருவிதமாய்ச் சுழல்கின்றன; உடல் நடுங்குகிறது" என்று சிவகாமி பதில் கூறினாள்.

நோயாளிக்குச் சமீபத்தில் சென்று, நான் அவளுடைய இடக்கையைப் பிடித்துத் தாதுபார்த்துவிட்டுக் கண்களையும் முகத்தையும் கூர்ந்து கவனித்தேன். அன்று தோப்பில் நான் பார்த்தபோது ஒருவகையான இன்பத்தையும் சந்தோஷத்தையும் எனக்குக் கொடுத்த அவளுடைய முகம்,—என்னைக் 'காதல்' என்னும் குளிர்ந்த அக்கினியில் மூழ்கிவித்த அவளுடைய முகம்,—இப்போது சகிக்கமுடியாத வருத்தத்தையும் வரைகடந்த அனுதாபத்தையும் என் மனத்தில் தோன்றச்செய்தது. நான் அவளுடைய கையைப் பிடித்தவுடன், அவள் என் பக்கமாகத் திரும்பி என்னைக் கூர்ந்து கவனித்தாள்; தானே புன்முறுவல் கொண்டாள். ஆனாலும், அவளுடைய கை நடுங்கிற்று; வாய் குழறிற்று.

"அவராயிருக்கமுடியுமா? அவராயிருக்கமுடியுமா? நான் விழித்துக் கொண்டாயிருக்கிறேன்? அம்மா! இவர் யார்?" என்று நோயாளியாகிய காந்திமதி மிக விழைந்த குரலுடன் சிவகாமியைக் கேட்டாள்.

"குழந்தாய் பயப்படாதே! இவர்தான் ஆத்மநாதர் என்னும் பெயருடைய வைத்தியர். மோஹனாங்கி உனக்கு வைத்தியம் செய்வதற்காக இவரை அனுப்பிருக்கிறாள்." என்று காந்திமதிக்கு பதில் வந்தது.

காந்திமதி ஒருவகையான அன்புடனும் பசசாதாபத்துடனும் என்னைக் கூர்ந்து நோக்கினாள். இமையாதிருந்த அவளுடைய விழிகளில் நீர்த்துளிகள் காணப்பட்டன. நான் அவளுடைய முகத்தைக் கையினால் தடவி, கண்ணீரைக் கைக்குட்டையால் துடைத்தேன்.

"கண்ணே! உனக்கு உடம்பு இப்போது எவ்விதமிருக்கிறது?" என்று சிவகாமி தன் புத்திரியை வினவினாள்.

"அம்மா! இவர் என் முகத்தைத் தடவியபோது எனக்கு ஒருவிதமான உள்ளக்கிளர்ச்சி உண்டாயிற்று. என்னை இவர் விழித்த கண்களோடு கூர்ந்து நோக்கியபோது, கதிரவன் கதிரைப்போன்ற ஓர் ஜோதி என் கண்ணுக்குத் தோன்றியது. முதலில் நான் ஒருவகையான அச்சங் கொண்டபோதிலும் இப்போது உடம்பு சிறிது குணமாயிருக்கிறது" என்று காந்திமதி பதிலுரைத்தாள்.

காந்திமதி கூறிய இந்த மறுமொழி எனக்குப் பேராச்சரியத்தை விளைவித்தது. என்னை அறியாமலே என்க்கு ஏற்பட்ட மாறுதல்களையும், நான் ஆதியிற் கொண்டிருந்த கொள்கைகள் சிறிதுசிறிதாக மாறிவருவதையும் இப்போது நான் உணர்ந்தேன். ஆ! என்னே காலத்தின் செயல்! மனிதனுடைய சிற்றறிவு இருந்தவாறு என்னே, என்னே!

சிவப்பிரகாசம் முதன்முதல் காதலைப்பற்றியும், இல்லறதருமத்தைப்பற்றியும் மிக விரிவாய்க் கூறியபோது அவருடைய வார்த்தையில் நம்பிக்கையில்லாத நான், இப்போது 'காதல்' என்பது ஒன்று நிச்சயமாயிருக்கிறதென்றும், அது மிகுந்த ஆற்றலுடையதென்றும் அறிந்தேன்,— அறிந்தது மாத்திரமா? இல்லை; உள்ளபடியே உணர்ந்தேன். குலாம்காதிறு மனோவசியத்தைப் பற்றியும் ஆத்மக்காட்சியைப் பற்றியும் இன்னும் இவைபோன்ற பல அரிய விஷயங்களைப் பற்றியும் பிரசங்கம் செய்தபோது 'அவன் பொய்யன்' 'உலகை வஞ்சிப்பவன்' 'பயித்தியம் பிடித்தவன்' என்று அவனை இகழ்ந்துபேசினேன், ஆனால் இப்போதோ அவனுடைய கொள்கைகளிலும் சிறிது உண்மையிருக்கிறதென்பதை அறிந்தேன்.

"நோயாளிகளைக் கண்ணினால் பார்ப்பதினாலும், அவர்களுடைய சரீரத்தை மேலிருந்து கீழ்நோக்கிக் கையாற்றடவி விரல் நுனிகளை உதறுவதினாலும்; சில

மந்திரங்களை ஜெபிப்பதினாலும் நாம் வியாதியை நீக்குதல் கூடும்" என்று குலாம் காதிறு அன்றிரவு தாம் செய்த பிரசங்கத்தில் கூறியது, அப்படியே இப்போது என் ஞாபகத்திற்கு வந்தது. இதற்கு முன் மனத்தையாவது மனோ சக்தியையாவது நம்பாதிருந்த நான், இப்போது அவைகளின் இருப்பில் பூரண நம்பிக்கை கொண்டேன். அதிகம் சொல்லுவானேன்? காந்திமதியை முதல் முதல் தோப்பில் சந்தித்த காட்சியானது, இவ்வுலகத்திலுள்ள நூல்களை போதிப்பதைக் காட்டினும், சிவப்பிரகாசத்தின் வாசாமகோசரமான பேச்சைக்காட்டிலும், சுலபமாகவும், தெளிவாகவும், 'காதல்' என்பதைப்பற்றி எனக்குப்போதித்தது. இரண்டாம் முறையாகக் காந்திமதியை, அவள் நோயினால் வருந்திய சமயத்தில், நான் சந்தித்தபோது, "மனம்" "மனோசக்தி" "ஆதமக்காட்சி" இவைகளைப்பற்றி எவ்வளவு தெரிந்து கொள்ள வேண்டுமோ அவ்வளவும் தெரிந்து கொண்டேன். ஆகவே சிவப்பிரகாசத்தின் போதனைசக்தியைக் காட்டிலும், குலாம் காதிறுவின் உபந்நியாச ஆற்றலைக் காட்டிலும் காந்திமதியின் சரீரத்தோற்றம்,—நான் சம்பந்தப்பட்ட மட்டில்,—மிகச்சிறந்த தென்பதிற் சந்தேக முண்டோ? நிரீசுரவாதக் கொள்கை என்னும் பாழடைந்த இருட் குகைக்குள் வீழ்ந்து கிடந்த என்னை அக்குகைக்குள்ளிருந்து மெதுவாக மேலேறி வந்து ஆஸ்திகனானபடியினால் காணும்படி தூண்டியவள் காந்திமதியே.

ஜுரம் தணிவதற்கும் பலவீனம் நீங்குவதற்கும் நான் அன்று காந்திமதிக்கு மருந்து கொடுத்தேன். அன்று முதல் மூன்று நாள் வரையில் காலைமாலை இருவேளையிலும் அவள் வீட்டிற்குச் சென்று தகுந்த சிகிச்சை செய்தேன். காந்திமதியின் வியாதி ஒருவாறு நீங்கி, அவள் பூரணமான குணமடையும் நிலைமையில் இருந்தாள். ஆனால், நான்காம் நாட்காலையில் வழக்கம்போல் வைத்தியம் பார்ப்பதற்காக நான் காந்திமதியின் வீட்டிற்குச் சென்றேன். என்னைக் கண்டதும் வேலைக்காரி வெளியில் வந்து "ஐயா! காந்திமதி ஊரில் இல்லை; அவள் நேற்றிரவு புறப்பட்டு மதுரைக்குச் சென்று விட்டாள்" என்று கூறினாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் வருத்தமும் ஆச்சரியமும் என்னிடம் கலந்து தோன்றின. வேலைக்காரி சொன்ன செய்தியை நம்புவதற்கு என்னால் முடியவில்லை. படுக்கையை விட்டு எழுந்து சிறிது தூரம் நடப்பதற்குச் சக்தியற்றிருந்த 'காந்திமதி' மதுரைக்குப் போய்விட்டாள் என்று சொன்னால் யார் தான் நம்புவார்கள்? நான் மாளிகையை விட்டு வெளியே வந்து எங்கு செல்வது, யாது செய்வதென்று அறியாதவனாய்த் தெருவிலேயேசிறிது நேரம் உலாவிக் கொண்டு நின்றேன். அவ்விதம் உலாவிக் கொண்டு நின்றபோது 'சரவண விலாஸ' மாளிகைக்குள்ளிருந்து ஆயுர்வேத பண்டிதர் பத்மநா

பர் வெளியே சென்றதை நான் கண்டேன். உடனே எனக்கு உண்மை புலப்பட்டு விட்டது. காந்திமதி மதுரைக்குச் செல்லவில்லை என்றும், மோகனாங்கி செய்த சூழ்ச்சியினாலோ அல்லது மாஜிஸ்டிரேட் மகம்மதாலி செய்த சூழ்ச்சியினாலோ பண்டிதர் பத்மநாபர் காந்திமதிக்கு வைத்தியம் பார்க்க நேர்ந்ததென்றும் நான் ஊகித்தறிந்து கொண்டேன். கடைசியாக ஒரு யோசனை எனக்கு உண்டாயிற்று. மோகனாங்கியைப் போய்ப்பார்த்தால் உண்மை விளங்குமென்றும், அவளிடம் விஷயங்களை விவரமாய் எடுத்துக் கூறினால் அவள் எதாவது ஒரு பரிகாரம் தேடுவாள் என்றும் நான் கருதி, உடனே 'பத்மவிலாஸ்' மாளிகைக்குச் சென்று மோகனாங்கியைக் கண்டு பத்மநாபர் 'சரவண விலாஸ்'த்திலிருந்து வெளிவந்ததையும், காந்திமதி மதுரைக்குப் போய்விட்டாள் என்று வேலைக்காரி பொய் புகன்றதையும் விவரித்துரைத்து காந்திமதி மீது நான் காதல் கொண்டிருக்கிறேன் என்றும் அவளை எவ்விதத்திலும் மணம்புரிய வேண்டுமென்றும் வியக்தமாக எடுத்துக் கூறினேன்.

"ஆத்மநாதரே! நீர் காந்திமதியின் மீது காதல் கொண்டிருப்பது உண்மையேயாயினும், அவள் உமக்கு ஏற்ற மனைவியாகாள் என்று நான் நினைக்கிறேன். அவ்விதம் நான் நினைப்பதற்குப் பல காரணங்களிருக்கின்றன. முதலாவதாக அழகும், வாலிபப்பருவமும் ஒருங்கமைந்த ஒரு வைத்தியருடைய மனைவி, திடசரீரமுடையவளாயும் நோயற்றவளாயும் இருக்க வேண்டும். ஆனால் காந்திமதியோ அடிக்கடி வியாதியினால் பீடிக்கப்படுகிறாள்; அவள் சரீரமோ மிகவும் மலினமுற்றிருக்கிறது. இரண்டாவதாக நீர் இவ்வுலகத்தையும் இவ்வுலகத்தில் அநுபவிக்கப்படும் சுக துக்கங்களையும் தவிர வேறு உலகங்களாவது சுக துக்கங்களாவது, ஆத்மாவாவது, கடவுளாவது இல்லை யென்னும் கொள்கையுடையவராக இருக்கின்றீர். காந்திமதியோ தான் அடிக்கடி சூக்ஷும சரீரத்தோடு பிரயாணம் செய்வதாயும் இவ்வுலகத்தினைக்காட்டிலும் சிறந்தவைகளாயும் அருமையுடையவைகளாயுமுள்ள பல உலகங்களைப் பார்ப்பதாயும் சொல்லுகிறாள். காந்திமதி கடவுள் உண்டென வாதிக்கும் ஆஸ்திகமதத்தைச் சேர்ந்தவள்; நீரோ கடவுள் இல்லை யென்று போராடும் நாஸ்திக மதத்தினர். இக்காரணங்களால் உமக்கு ஏற்ற மனைவி காந்திமதி அல்லள் என்று எனக்குத் தோன்றுகிறது" என்று மோகனாங்கி கூறினாள்.

நான் பல காரணங்கள் கூறி வாதித்தபிறகு "வைத்தியரே! நான் உம்முடைய காரியத்திற்குக் குறுக்கே நிற்பதாக நினைக்கவேண்டாம். தீர ஆலோசித்து அதன்பிறகு உம்முடைய சௌகரியப்படி செய்துகொள்ளும். இருந்தபோதிலும் முதலில் காந்திமதியை நேரே சந்தித்து உம்முடைய கருத்தை அவளிடம் தெரிவித்து அவளுடைய சம்மதத்தைத் தெரிந்துகொள்வதுநலம்" என்று மோகனாங்கி கூறினாள். நான் "சரி; அவ்விதமே செய்கிறேன்" என்றுபதில் கூறிவிட்டு அவ்விடமிருந்து நீங்கினேன். இரண்டொரு தினங்கள்கழிந்தன.

காந்திமதிக்கு மறுபடியும் ஜுரம் கடுமையாக வந்துவிட்ட தென்றும், நான் போய்ப்பார்த்து அவளுக்கு மருந்து கொடுக்கவேண்டுமென்றும் மோகனுங்கி யிடமிருந்து ஒருகடிதம் வந்தது. ஒரு கணமும் தாமதியாது உடனே நான் 'சரவணவிலாஸ்'த்திற்குச்சென்று சிவகாமியைச் சந்தித்தேன்.

"வைத்தியரே! குழந்தைக்கு மறுபடியும் ஜுரம் வந்துவிட்டது. நாடிகள் சரியாய்ப் பேசவில்லை என்றும், கபம் மேலோங்கி நிற்கிறதென்றும் பண்டிதர் பத்மநாபர் கூறி, இனித்தம்முடைய சிகிச்சை பயன்படாதென்றும் வேறுவைத்தியர்களைக்கொண்டு பார்க்கலாமென்றும் சொல்லிவிட்டுச் சென்றார். ஆனால் உம்மை அழைத்துக்காட்டவேண்டாமென்று அவரும் மகம்மதாலியும் வற்புறுத்தியுரைத்தார்கள். ஆனாலும், முதலில் உம்மாலேயே அவள் குணமடைந்தானாதலால், அவர்களுடைய பேச்சைக் கேட்காமல் உம்மை அனுப்பும்படி நான் மோகனுங்கிக்குக் கடிதமூலமாய்த் தெரிவித்தேன்" என்று சிவகாமி என்னைக் கண்டதும் கூறினாள்.

"தங்களுடைய புத்திரியை நான் விஷங்கொடுத்துக் கொன்றுவிடுவேன் என்று பத்மநாபரும் மகம்மதாலியும் கருதினார்களோ?" என்று நான் சிரித்துக்கொண்டே சிவகாமியை வினவினேன்.

"அவர்கள் அவ்விதம்கூறவில்லை. சரி, இருக்கட்டும். காந்திமதிபிரக்ஞையற்றுப் படுக்கையிற் கிடக்கின்றாள். அவளை வந்துபாரும்" என்று சிவகாமி கூறி என்னை நோயாளி படுத்திருந்த அறைக்குள் அழைத்துச்சென்றாள்.

நான் உள்ளேசென்று காந்திமதியைப் பார்த்தேன். அவளுடையநெற்றியில் பற்றும், கண்களில் கலிக்கமும் போடப்பட்டிருந்தன. அவள் கண்ணை மூடியபடியே ஸ்மரணையற்றுக் கிடந்தாள். சரீரம் முழுமையும் ஒரு கம்பளியினால் போர்த்தப்பட்டிருந்தது. நான் கையைப்பிடித்து நாடி எவ்விதம் துடிக்கிறதென்று பார்த்தபோது, மூன்று நாடிகளும் தத்தம் நிலைபிறழாமலும் ஒழுங்காகவும் ஓடிக்கொண்டிருந்தன. ஜ்வரோஷ்ணமானியைக் கட்கத்திலும் நாவிலும் வைத்துப்பார்த்தேன். சுகமான சரீரமுடையவர்களுக்கு எத்தனை டிகிரி நியாயமாய் இருக்கவேண்டுமோ அத்தனை டிகிரியே காந்திமதிக்கும் இருந்தது. ஆகவே, அவளுடைய சரீரத்தில் எத்தகைய கெடுதியுமில்லை என்பதை நான் நிச்சயமாய் அறிந்துகொண்டேன். ஆனால் சரீரம் சரியான நிலையில் இருக்கும்போது அவள் இவ்விதமிருப்பதற்குக் காரணம் புலப்படவில்லை.

"கடந்த ஐந்தாறு தினங்களாயக் காந்திமதி எழுந்து வெளியே சென்று உலாவினளா? பத்மநாபர் ஏதாவது மருந்து கொடுத்தாரா?" என்று நான் சிவகாமியை வினவினேன்.

"பத்மநாபர் ஏதோ மருந்து கொடுத்தார்; ஆனால் காந்திமதி வெளியே போகக்கூடாதென்றும் அவளுடைய சரீரத்தில் காற்றுப் படக்கூடாதென்றும் அவர் கண்டிப்பாய் உத்தரவுசெய்திருந்தார்." என்று சிவகாமி பதிலுரைத்தாள்.

உடனே எனக்கு உண்மை புலப்பட்டது. சுத்தமான காற்றும், இலேசான ஆகாரமும், மனோரம்மியமான காட்சியும், சந்தோஷகரமான சம்பாஷணையும், இச்சமயத்தில் காந்திமதிக்கு அவசியம் வேண்டுமென்பதையும், அவைகளே அவிளுக்குத்தகுந்த ஔஷதங்கள் என்பதையும் பத்மநாபர் அறியாதிருக்க வேண்டும், அல்லது அறிந்திருந்த போதிலும், வேண்டுமென்றே,—ஒருசமயம் என்னையும் அவளையும் சந்திக்கம்படி விடக்கூடாதென்னும் நோக்கத்தோடிருப்பினுமிருக்கலாம்,—அவளை வெளியே போகக்கூடாதென்று கட்டளையிட்டிருக்கவேண்டும் என்பதை நான் அறிந்துகொண்டேன்.

நான் வெந்நீரில் துணியைநனைத்துப்பிழிந்து காந்திமதியின் நெற்றியில், மரத்துண்டில் பிடித்துள்ள வசிரப்பசையைப்போல் பலமாய்ப்பிடித்திருந்த பற்றைத் துடைத்துவிட்டு, மெல்லிய வெள்ளைத்துணியினால் தைக்கப்பட்ட உடையை அணிந்துகொள்ளச்செய்து, அவளை மெதுவாக நடத்தி அழைத்துக் கொண்டு தோட்டத்திற்குச்சென்றேன். சிவகாமி கோதுமைக்கஞ்சி கொண்டு வந்து காந்திமதிக்குக் கொடுத்தாள். கால்மணி நேரம்வரையில் தோட்டத்தின் அற்புதக்காட்சியைக்கண்டு அவள் வியந்துகொண்டிருந்தாள். நறுமலர் மணத்தோடுகலந்து வீசிய மெல்லிய பூங்காற்று, அவளுடைய சரீரத்திற் படவே அவள் ஒருவிதமான உற்சாகமும் சந்தோஷமும் கொண்டாள். உள்ளத்திற்கு உவப்பினை உண்டாக்கக்கூடிய விஷயங்களைக் குறித்து நானும் சிவகாமியும் அவளுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தோம். அதன் பிறகு காந்திமதியை வீட்டுக்குள் அழைத்துவந்தோம். அன்றுமுதல் நான் பிரதிதினமும் காலை மாலை இருவேளைகளிலும் 'சரவணவிலாஸ'த்திற்குச் சென்று, காந்திமதியை அழைத்துக்கொண்டு தோட்டத்திற்குப் போவதும், சிறிதுநேரம் சம்பாஷித்துக்கொண்டிருப்பதும், பிறகு அவளை வீட்டிற்குள் அழைத்து வருவதுமாகச்சில தினங்கள்செய்துவந்தேன். வைத்தியர்களுடைய செயற்கை மருந்தைக்காட்டிலும் இறைவனுடைய இயற்கை அமைப்பில் அமைந்திருக்கும் இயற்கை மருந்து அவளுக்குப் பூரணசுகத்தையும் தீவிரகுணத்தையும் ஆச்சரியப்படத்தக்கவிதமாய்க்கொடுத்தது, காந்திமதிநோயிலிருந்து முற்றும் விடுபட்டாள்.